ழிச்செல்வம்

மாத இதழ்

சுபகிருது ௵ மார்கழி ௴

MADRAS REGISTRAR'S OFFICE
17.792
23 JAN 1963
MADRAS

கொளுஞ்சி (காவாளை)

மானாவாரி மணற்பாங்கான நிலங்களுக்கேற்ற ஒரு நல்ல தழை உரம்

விலை 25 நயா பைசா
வருட சந்தா ரூ. 3

[1962–63 ம் ௵ டிசம்பர்-ஜனவரி ௴

எங்கள் புத்தாண்டு வாழ்த்துக்கள்
மேழிச் செல்வ வாசகர்களுக்கு

❖ ❖ ❖ ❖ ❖

1963-ம் ஆண்டில்

"விளைச்சலைப் பெருக்கி விரோதியை விரட்டுவோம்",

என்று உறுதிகொள்வோம்.

சென்னை நகரக் காய்கறி அபிவிருத்திக் குழு

அமைப்பு:

தேச நெருக்கடியைத் தீர்ப்பதற்கு உடனடியாக உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டும். குறிப்பாக குறுகிய காலப் பயிர்களை வசதியுள்ள இடங்கள் எங்கும் பயிர் செய்ய வேண்டும். முக்கியமாக காய்கறி உற்பத்தியை அதிகரிக்க வேண்டும். சென்னை நகரத்தில் பங்களாக்களில் காய்கறி உற்பத்தியை அதிகரிக்கும்பொருட்டு "சென்னை நகரக் காய்கறி அபிவிருத்திக் குழு" ஒன்று அரசாங்க ஆணை எண் 3566, 1962-ம் ஆண்டு நவம்பர் மாதம் 21-ந் தேதியின் படி அமைக்கப்பட்டுள்ளது.

சென்னை விவசாயத் துறை நெறியாளர் தலைவராகவும், சைதாப் பேட்டை மாவட்ட விவசாய அலுவலர் செயலாளருமாக அக் குழுவில் பணியாற்றுகின்றனர். இவர்களைத் தவிர இன்னும் பல அங்கத்தினர்கள் இக் குழுவில் இருக்கின்றனர்.

நோக்கம் :

சென்னை நகரத்தில் வசதியுள்ள இடங்களிலெல்லாம், காய்கறி உற்பத்தியை அதிகரிப்பதாகும். இக் குழு காய்கறி பயிர் போட்டி ஆரம்பித்துள்ளது. பயிர் போட்டியில் கலந்து சிறந்த முறையில் காய்கறி சாகுபடி செய்து வெற்றி பெறுபவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படும். மற்ற விவரங்களை சைதாப்பேட்டை மாவட்ட விவசாய அலுவலகத்தைக் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

"நெருக்கடி தீர பெருக்குவீர் காய்கறி"

P 792

உள்ளுறை

	பக்கம்.
சென்னை நகரக் காய்கறி அபிவிருத்திக் குழு	2
நம் நாட்டில் இன்றைய நிலையில் விவசாயிகள் கடமை	5
இன்றைய தேவை—குறுகிய காலப் பயிர்கள்	8
குறுகிய கால கரும்பு விதைப் பயிர்	10
எண்ணெய் வித்து அபிவிருத்தியும் நிலக்கடலை தீவிர சாகுபடி திட்டமும்	12
பங்களூர் கத்தரிக்காய்	14
கருங்கண்ணி ஆராய்ச்சியின் முன்னேற்றம்	16
மணிச்சத்தும் மணிச்சத்துள்ள உரங்களும்	17
ஆதாரப் பள்ளிகளுக்கான தோட்டம்	18
விவசாயச் செய்திக் கதிர்	20
தை-மாசி மாத விவசாயக் குறிப்புகள்	22
ஊறவைத்த விதைகள் உற்பத்தியைப் பெருக்கும்	23
கேள்வி அரங்கம்	24
வழிகாட்டி (நாடகம்)	26
1962-ம் ஆண்டு அக்டோபர் மாதத்திய காலநிலை அறிக்கை	29
ஆகாசவாணியின் திருச்சி வானொலி நிலையம்	30

விளம்பரங்கள் :

பிரதம மந்திரியின் உத்திரவாதம்	4
பூச்சி பூசண நோய்களைத் தொலைக்கச் சிறந்த கருவி	7, 21
ராஜா பண்ணைத் தோட்டம்	11
சூபர் பாஸ்பேட்	15
சூரியன் மார்க் கலப்பு உரங்கள்	19
வாட்டர் டிவைனர்	23
பாரிஸ்	25

பிரதம மந்திரியின் உத்திரவாதம்

" ஆங்கிலம் ஒரு இணை மொழியாக நீடித்து இருக்கும். இந்தி மொழி புழக்கத்தில் இல்லாத பிராந்தியங்களின் மக்கள் விரும்பும் வரை ஆங்கில மொழியை அகற்றமாட்டேன். "

—ஜவாஹர்லால் நேரு.

DA 62/497

மேழிச்செல்வம்

சுழன்றுமேர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை.

மலர் 19 | சுபகிருதுஸ்ரீ மார்கழிமீ—1962-63-டிசம்பர்-ஜனவரி | இதழ் 12

நம் நாட்டின் இன்றைய நிலையில் விவசாயிகளின் கடமை

(சி. பாலசுப்ரமணியன், விவசாய காலநிலை ஆராய்ச்சியாளர், கோவை., எம். ஜே. டேவிட், விவசாயச் செய்தி அலுவலர், சென்னை.)

வஞ்சக சீனர் அக்கிரமமாய் ஆக்கிரமித்திருக்கும் நம் எல்லை பகுதியிலிருந்து விரட்ட, நம் சுதந்திரத்தை பாதுகாக்க மக்கள் அனைவரும் ஒன்றுபட்டு, சேவை செய்ய முன் வந்திருக்கிறார்கள். யுத்த நிதிக்கு ஏராளமாக பொன்னும் பணமும் குவிக்கிறார்கள். ஒவ்வொரு தொழிலிலும் பணியாற்றும் பலர் அதிக நேரம் வேலை செய்யவும், உற்பத்தியை பெருக்கவும் ஆர்வம் காட்டுகின்றனர். விவசாயிகளும் நாட்டுப்பற்றில் எவ்விதத்திலும் குறைந்தவர்களல்லர் என்பதை உற்பத்தியை உச்ச அளவுக்கு பெருக்கி நிரூபிக்க வேண்டும். அஞ்சா நெஞ்சுடன் போரில் முன்னணியில் நிற்கும் நமது ஜவான்களுக்கு போதிய உணவும், தரமுள்ள உணவும் விரைவில் உற்பத்தி செய்ய வேண்டியது விவசாயிகளின் கடமை.

உற்பத்தியைப் பெருக்க அரசாங்கம் விவசாயிகளுக்கு எத்தனையோ சலுகைகளை அளிக்கின்றது. அவைகளை மேழிச் செல்வம் முன் இதழ்களில் பிரசுரித்திருக்கிறது அவற்றை முழுவதும் பயன் படுத்த வேண்டும். நிபுணர்கள் ஆராய்ச்சியின் மூலம் கண்டுள்ள நவீன விஞ்ஞான முறைகளை உங்கள் உள்ளூர் விவசாய விஸ்தரிப்பாளர் மூலமும், விவசாயச் செய்தி நிலைய வெளியீட்டுகள் மூலமும் அறிந்து அவைகள் அனைத்தையும் உடனடியாக நடைமுறையில் கையாள வேண்டும். விவசாயச் செய்தி நிலைய வெளியீடுகள் அனைத்தும் உங்கள் வட்டாரச் செய்தி நிலையத்தில் காணலாம்.

உடனடியாக விவசாயிகள் கையாளக் கூடிய நவீன விவசாய முறைகள் சிலவற்றை இங்கே குறிப்பிடுகிறோம் :—

(அ) "விளையும் பயிர் முளையிலே" என்பது முன்னோர்கள் வாக்கு. முளை என்பது வித்தைப் பொருத்திருக்கிறது. ஆகையினால் நல்ல வீரியமுள்ள பொறுக்கு வித்துக்களைக் கொண்டு பயிர்களைச் சாகுபடி செய்யவேண்டும்.

(ஆ) விதையை தெளிப்பதற்கு முன் நிலத்தை நன்கு பண்படுத்த வேண்டும். இதற்கு சாதகமான விஞ்ஞான முறைப்படி கண்டுபிடிக்கப்பட்ட நவீன கலப்பைகளைக் கொண்டு நிலத்தைப் பண்படுத்தவேண்டும்.

(இ) நிலத்திற்கு வேண்டிய உரங்களை வேண்டிய அளவு நிலத்தில் போடவேண்டும். உங்கள் மண்ணை கோயம்புத்தூர் அல்லது ஆடுதுறைக்கு அனுப்பி பரிசோதித்து அதற்கு சிபாரிசு செய்யப்படும் உரச்சத்தை உபயோகியுங்கள்.

(ஈ) "மாரி இல்லையேல் காரியம் இல்லை" என்பது ஒரு பழஞ்சொல். விவசாயத்திற்கு மழை மிக்க அவசியம். மழையை ஒட்டித்தான் பயிரின் மகசூல் இருக்கும்.

• உற்பத்தியைப் பெருக்கி உரிமையைக் காப்போம். •

மேகங்களிலிருந்து மழையை வருவிக்கும் ஆராய்ச்சியில் சென்னை சர்க்கார் ஈடுபட்டிருக்கிறது. விவசாயிகளுக்கு வேண்டிய மழையை கொடுக்கும் நிலை நம் மாநிலத்தில் சீக்கிரம் நிலவும். அதுவரையில் விவசாயிகள் பயிர்களுக்கு, வேண்டிய சமயத்தில் நீர்ப்பாசன வசதிகளைக் கொண்டு பயிர்களைக் காப்பாற்ற வேண்டும்.

(உ) பயிர்களைத் தாக்கும் பூச்சிகளையும் பூஞ்சண நோய்களையும் தக்க தருணத்தில் தடுக்க வேண்டும். ஆங்காங்குள்ள பூச்சி பூஞ்சண நிபுணர்களின் சேவை பூராவையும் பயன்படுத்த வேண்டும். விவசாயிகளுக்கு இது சம்பந்தமான அறிவிப்புகள் ரேடியோ மூலம் சென்னையிலிருந்து மாலை 6—05 மணி முதல் 6—15 வரையிலும், திருச்சிராப்பள்ளியிலிருந்து மாலை 6—15 முதல் 7—15 வரையிலும் ஒலி பரப்பப்படுகின்றன. விவசாயிகள் இந்த ஒலி பரப்புகளைக் கேட்டு பயன் அடையுமாறு கோரப்படுகிறார்கள்.

(ஊ) வயல்களில் களை, புல், பூண்டுகளை வளர வொட்டாமல் களை எடுக்கும் கருவிகள் மூலமோ அல்லது களைக் கொல்லிகள் மூலமோ தடுத்து மண்ணை இளறி விட வேண்டும்.

(எ) பயிர்களின் மகசூலைப் பெருக்குவதற்கு மிக முக்கியமான சாதகம் பயிர்களை நல்ல முறையில் தனிப் பயிராகவோ அல்லது கூட்டுப் பயிராகவோ சாகுபடி செய்வது. தனிப் பயிர்களைச் சாகுபடி செய்யும் பொழுது கூட, அதற்கு முன்னும் பின்னும் சாகுபடியாகும் பயிர்களை லாபகரமான முறையில் தேர்ந்தெடுக்க வேண்டும். பசுந்தாள் பயிர்களைச் சாகுபடி செய்யவேண்டும். பசுந்தாள் உரம் நிலத்திற்கு இன்றியமையாதது.

(ஏ) "சுவர் வைத்து சித்திரம்" என்பது நமது அனுபவத்தை ஒட்டிய ஒரு சொல். அதேபோல் விசாயத்திலும் மண்ணை வைத்துதான் விவசாயம். மண்ணரிப்பு தடுப்புத் திட்டங்கள் பல நம் நாட்டில் அமுலில் இருக்கின்றன. விவசாயிகள் அவற்றால் பயனடைந்து மண்ணை நல்ல முறையில் பாதுகாக்க வேண்டும்.

(ஐ) "ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு. பிளவுபட்டால் உண்டு தாழ்வு" என்னும் அனுபவம் நமது வாழ்க்கையில் நனகு உணர்ந்த விஷயம். முக்கியமாக விவசாயத்தில் இது மிகவும் பொருத்தமான சொல். சிறு நிலப் பட்டாதாரர்கள் ஒன்று சேர்ந்து நவீன முறையில் விவசாயம் செய்ய வேண்டும். கூட்டுறவுப் பண்ணையினால் உண்டாகும் பலன்கள் பல. அவைகளை அடைந்து விவசாயிகள் பயிர்களின் மகசூலைப் பெருகக வேண்டும்.

(ஒ) சர்க்கரை வள்ளிக்கிழங்கு, காய்கறிகள் போன்ற குறுகிய கால பயிர்கள், குறுகிய கால நெற்பயிர்கள் முதலியவற்றை ஏராளமாகப் பயிரிட வேண்டும். முக்கியமாக காய்கறித் தோட்டங்களை எவ்வளவுக்கெவ்வளவு முடியுமோ அவ்வளவுக்கவ்வளவு அதிகரிக்க வேண்டும்.

ஒவ்வொரு மாதமும் மேழிச் செல்வத்தில் விவசாயச் செய்திக்கதிரின் கீழ் கொடுக்கப்படும் குறிப்புகளை பயன் படுத்த வேண்டும்.

கிராம சீர்திருத்தத் திட்டங்கள் எல்லாம் விவசாயிகளின் நலனை ஒட்டியே வகுக்கப்பட்டிருக்கின்றன. விவசாயிகளுக்கு பணவசதியைக் கொடுக்கும் முறையில் அநேக ஸ்தாபனங்கள் இப்பொழுது அமுலில் இருக்கின்றன. நாட்டில் இப்பொழுது அமுலுக்குக் கொண்டுவரப்படும் ஒவ்வொரு சீர்திருத்தத் திட்டமும் அடிப்படையாக விவசாயிகளின் நலத்தை ஒட்டியதாகவே இருக்கின்றது. விவசாயிகள் இந்தப் பல்வேறு வசதிகளை நல்ல லாபகரமான முறையில் உபயோகப்படுத்தி, தாங்கள் செய்யும் விவசாயம் நாட்டின் பாதுகாப்புக்கு முக்கியமென்று உணர்ந்து, ஒரு வினாடியும் வீணாக்காமல் விஞ்ஞான விவசாய முறையில் ஈடுபட்டு நாட்டின் விவசாய பொருள்களின் விளைவை அதிகப்படுத்தி நம் நாடு இறுதியில் சீனா சண்டையில் முழு வெற்றி பெற்று சுபீட்சமாக இருக்குமாறு பாடுபட வேண்டும் என்று கோருகிறேன்.

அட்டைப்பட விளக்கம்

கொளிஞ்சி—விதைப்பு—ஜனவரி, பிப்ரவரி. எக்கருக்கு 20 ராத்தல் விதை தேவை. பயன் அளிக்க 5, 6 மாதங்களாகும். எகருக்கு 5,000 முதல் 8,000 ராத்தல் தழை வரை கிடைக்கும். ஒருபோக நஞ்சையில் தொடர்ச்சியாக ஒன்று அல்லது இரண்டு வருஷங்கள் விதைத்தால், மறு வருஷங்களில் உதிரும் விதைகளிலிருந்து தானகவே உற்பத்தியாகும்.

பூச்சி, பூசண நோய்களைத் தொலைக்கச் சிறந்த கருவி

தூவானம் செய்ய



கேடார்
அசைப்பு ஸ்ப்ரேயர்

200 ராத்தல் அழுத்த சக்தியுடன் ஒரே மாதிரியாகத் தொடர்ந்து தூவானம் செய்யும்.

இந்த எல்லா ஸ்பிரேயர்களும் மானியத் திட்டத்தின்கீழ் வழங்க, தமிழ்நாடு விவசாய இலாகா நெறியாளரால் 'ரேட் கான்ட்ராக்ட்' திட்டத்தின்படி அங்கீகரிக்கப்பட்டவை. உங்கள் வட்டார விவசாய விளக்குனர் மூலமாகவோ, விவசாய வளர்ச்சி அதிகாரி மூலமாகவோ இந்த ஸ்ப்ரேயர்களை நீங்கள் பெறலாம்.



மூன்று விதங்களில்
தூவானம் செய்யும் ஹை-ட்ரீ
லான்சுடன்கூடிய கேட்டார்
அசைப்பு ஸ்பிரேயர்

எல்லா மரங்களுக்கும், நிலக்கடலை, தோட்டப் பயிர்களுக்கும் உபயோகியுங்கள்.



மாருத்
கையழுத்த ஸ்ப்ரேயர்

நாற்றங்காலிலும், விளைநிலப் பயிர்களிலும், பூச்சி பூசண நோய்களைக் கட்டுப்படுத்தத் தகுந்தது.

கையாலும், சக்தியாலும் இயக்கும்
இதர பல ஸ்ப்ரேயர்களும்,
டஸ்டர்களும் நாங்கள்
தயாரிக்கிறோம்.

மற்ற விபரங்களுக்கு
கீழே கண்ட
விலாசங்களில் விசாரியுங்கள் :

தயாரிப்பாளர்கள்



அசைப்பு ஸ்ப்ரேயர்
கேடார்-கோ.ஃ.பி

பாக்கு, தென்னை மரங்களுக்கு உபயோகியுங்கள்.

போன் எண்கள் { 84221 / 84245

AMERICAN SPRING & PRESSING WORKS (PVT.) LTD.

தந்தி : இல்லோகஸ்ட் மலாடு.

மலாடு—பம்பாய் 64.

ஏஜெண்டுகள் :

ரங்கஸ்வாமி அண்டு கோ.,

03, ஸ்ரீ நரசிம்ஹராஜா ரோடு, பெங்களூர்-2, மைசூர் ராஜ்யம்.

தந்தி : ஹோன்விட்   போன் : 2971.

இன்றைய தேவை-குறுகிய காலப் பயிர்கள்

(விரிவிணைப் பிரிவு—கோவை)

சீனர் பெரும்படை நம் எல்லையைத் தாக்கி நிற்கும் இந்நெருக்கடியான நேரத்தில் அரசாங்கத்தையும், குறிப்பாக விவசாயிகளையும் எதிர் நோக்கியிருக்கும் பிரச்னை உணவு உற்பத்தியை உயர்த்துவதே ஆகும். இத் தேவையைப் பூர்த்தி செய்ய சாதாரணமாகப் பயிர்ச்சாகுபடி செய்யப்படும் பருவங்களுக்கு இடையே உள்ள குறுகிய காலத்தைப் பயிரிடாமல் வீணாக்குவதைத் தவிர்த்து அக் குறுகிய காலங்களுக்கேற்ற பயிர் ரகங்களைப் பயிரிட வேண்டும். உதாரணமாக ஜனவரி மாதத்தின் பிற்பகுதியிலிருந்து மே மாதம் வரை விவசாயிகளின் நிலங்களில் பயிர்ச் சாகுபடி செய்யப்படுவதில்லை. இக் குறுகிய காலத்தில், பாசன வசதியுள்ள நிலங்களில் பயிரிடுவதற்கேற்ற பயிர் ரகங்கள் பலவற்றை விவசாயத்துறை வெளியிட்டுள்ளது. அத்தகைய குறுகிய காலப் பயிர்களைப்பற்றிய தகவல்கள் சில கீழே தரப்படுகின்றன :—

நெல்

ஏ.டி.டி. 9.—

(ஆடுதுறை–9) 'பூங்கார்' என்று அழைக்கப்படும் இந்த ரகம் தஞ்சை மாவட்டத்தில் சாகுபடி செய்வதற்கு ஏற்றது. 120 நாட்களில் ஏக்கருக்கு 4600 ராத்தல் வரை மகசூல் அளிக்கிறது. இதன் பருவம் ஜனவரி முதல் மே மாதம் வரை. இதன் அரிசி நல்ல வெண்மை நிறமுடையது. இந்நெல் ரகம் சீர்காழி தாலுக்காவிற்கு மிகவும் ஏற்றது.

டி. கே. எம். 6 : கோ. 18.—

(திரூர்குப்பம்-6, கோயம்புத்தூர்–18) சன்னசொர்ணவாரி எனப்படும் டி. கே. எம்.–6 எனும் ரகம் 110 நாட்களில் ஏக்கருக்கு 3,320 ராத்தல் வரைமகசூல் அளிக்கிறது. வெள்ளைக்கார் எனப்படும் கோ–18 எனும் ரகம் 125 நாட்களில் ஏக்கருக்கு 2,700 ராத்தல் வரை மகசூல் அளிக்கிறது. இவ்விரு ரகங்களையும் ஜனவரி—மே மாதங்களில் தென்னாற்காடு, வட ஆற்காடு, செங்கல்பட்டு மாவட்டங்களில் சாகுபடி செய்யலாம். இப்போதும் செங்கல்பட்டு மாவட்டத்தில் நவரைப் பருவம் டிசம்பர் மாதத்தில் ஆரம்பித்து ஏப்ரல்—மே மாதங்கள் வரை இருக்கிறது.

கோ. 29 (கோயம்புத்தூர்—29) ஒட்டு அறுபதாம்கோடை எனப்படும் இந் நெல் ரகம் 110 நாட்களில் ஏக்கருக்கு சராசரி 3,000 ராத்தல் வரை மகசூல் அளிக்கிறது. சன்ன சொர்ணவாரியும், இந்த ரகமும் சேலம், கோவை, மதுரை மாவட்டங்களில் ஜனவரி முதல் மே வரை சாகுபடி செய்ய ஏற்றவை. ஒட்டு அறுபதாம் கோடை ரகம் பிப்ரவரி முதல் ஜூன் மாதம் வரை திருச்சி மாவட்டத்தில் சாகுபடி செய்வதற்கும் ஏற்றது.

சிறு தானியங்கள்.

கீழ் குறிப்பிட்டுள்ள சிறுதானிய ரகங்கள் குறுகிய காலத்தில் விளைச்சல் பெறுவதற்கு ஏற்றவை.

சோளம்—

கோ. 11.—இச் சோள ரகம் தீவனப் பயிராகச் சாகுபடி செய்வதற்கு மிகவும் ஏற்றது. 75 நாட்களில் ஏக்கருக்கு 20,000 ராத்தல் வரை நேர்த்தியான பசுந்தீவனம் அளிக்கிறது. இப் பொறுக்கு ரகம் தமிழ் நாட்டின் எல்லா மாவட்டங்களிலும் பயிரிடுவதற்கு ஏற்றது. இந்த ரகத்துக்குத் தமிழ் நாட்டில் மட்டுமின்றி இந்தியாவின் மற்ற ராஜ்யங்களிலுள்ள பாற்பண்ணை விவசாயம் செய்யும் விவசாயிகளிடையேகூட நல்ல கிராக்கி இருக்கிறது. டிசம்பர், மார்ச் மாதங்களில் இதை விதைக்கலாம். தானியப் பயிராக 115 நாட்களில் 2,000 ராத்தல் வரை மகசூல் அளிக்கிறது.

கோ. 12 .—'மொட்டை வெள்ளைச் சோளம்' எனப்படும் இந்த ரகம் இறைவைப் பயிராக 85-90 நாட்களில் ஏக்கருக்கு 2,700—3,000 ராத்தல் வரை மகசூல் அளிக்கிறது. பிப்ரவரி—மார்ச் மாதங்களில் இதை விதைக்கலாம். தமிழ்நாட்டில் தென் மாவட்டங்களைத் தவிர மற்ற மாவட்டங்களுக்கு இது ஏற்றது.

கோ. 18.—இறைவைப் பயிராக இந்த ரகம் 95 நாட்களில் ஏக்கருக்கு 2,200—2,400 ராத்தல் வரை மகசூல் அளிக்கிறது. டிசம்பர்—மார்ச் மாதங்களில் இதைச் சாகுபடி செய்யலாம். தமிழ்நாட்டின் எல்லா மாவட்டங்களிலும் சாகுபடி செய்வதற்கு ஏற்றது.

ராகி கோ–7.—இறைவைப்பயிரான இந்த ரகம் தமிழ் நாட்டின் எல்லா மாவட்டங்களிலும் சாகுபடி செய்வதற்கு ஏற்றது. பிப்ரவரி—மார்ச் மாதங்களில் இதை விதைக்க 100 நாட்களில் ஏக்கருக்கு 2,500—3,000 ராத்தல் வரை மகசூல் அளிக்கிறது.

கம்பு—

எக்ஸ்–3.— இது ஒரு கலப்புக் கம்பு ரகம். இறைவைப் பயிராக மார்ச் மாதத்தில் இதை விதைக்கலாம். 85—90 நாட்களில் 2,000 ராத்தல் தானியம், மகசூல் அளிக்கிறது. கோயம்புத்தூர், திருநெல்வேலி மாவட்டங்களுக்கு மிகவும் ஏற்றது.

கோ. 4,-இதுவும் ஒரு இறைவை ரகம். 75–80 நாட்களில் ஏக்கருக்கு 1,800—2,000 ராத்தல் வரை மகசூல் அளிக்கிறது. மார்ச்–எப்ரல் மாதங்களில் இதை விதைக்கலாம். மத்திய மாவட்டங்களுக்கு இது மிகவும் ஏற்றது.

தினை—

கோ. 1.—'மொசுத் தினை' என்று சொல்லப்படும். இத்தினை ரகம் மார்ச்–எப்ரல் மாதங்களில் இறைவைப் பயிராக விதைக்கலாம். 100 நாட்களில் ஏக்கருக்கு 1,300 ராத்தல் வரை மகசூல் கிடைக்கிறது. சேலம், கோவை, தென்னுற்காடு மாவட்டங்களுக்கு இது ஏற்றது.

கோ. 2.—சடைத்தினை எனப்படும் இந்த ரகமும் இறைவைப்பயிராகச் சாகுபடி செய்யப்படுகிறது. இதை மார்ச் மாதத்தில் விதைக்கலாம். 90 நாட்களில் 1,500 ராத்தல் வரை மகசூல் அளிக்கிறது. இது தமிழ்நாட்டின் மத்திய மாவட்டங்களுக்கும், தென் மாவட்டங்களுக்கும் ஏற்றது.

எண்ணெய் வித்துக்கள்

நிலக்கடலை—டி.எம்.வி. 2—(திண்டிவனம்-2)—இதை மானுவாரிப் பயிராகவும், இறைவைப் பயிராகவும் சாகுபடி செய்யலாம். இது ஒரு கொத்து ரகம் (Bunch variety). இறைவைப் பயிராக ஜனவரி–மார்ச் மாதங்களில் இதைப் பயிரிடலாம். 105 நாட்களில் 2,000–4,000 ராத்தல் கடலை மகசூல் கிடைக்கிறது. இறைவைப் பயிராகத் தமிழ்நாட்டின் எல்லா மாவட்டங்களுக்கும் இது ஏற்றது. 100 ராத்தல் கடலையிலிருந்து சுமார் 76 ராத்தல் பருப்பு கிடைக்கிறது. இதன் எண்ணெய்ச் சத்து 49 சதவீதம்.

எள்—

டி. எம். வி. 2 (திண்டிவனம்-2)—இந்த ரகத்தை நவம்பர்–டிசம்பர் மாதத்தில் பயிரிடலாம். 75 நாட்களில் 375 ராத்தல் வரை மகசூல் அளிக்கிறது. இதில் 52 சதவீதம் எண்ணெய்ச் சத்து அடங்கியிருக்கிறது.

டி. எம். வி.—3 (திண்டிவனம்-3) — பிப்ரவரி–மார்ச் மாதங்களில் இறைவைப் பயிராக இதைச் சாகுபடி செய்யலாம். 85 நாட்களில் 500 ராத்தல் வரை மகசூல் அளிக்கிறது. இதன் எண்ணெய்ச் சத்தும் 52 சதவீதம் தான்.

நஞ்சைத் தரிசில் பருத்தி (பி. 216 எப்)—இது நஞ்சை வயல்களில் நெல் அறுவடைக்குப் பின் பயிரிடுவதற்கு ஏற்ற ஒரு குறுகியகாலப் பருத்தி. இதன் பயிர்க்காலம் 4½ மாதங்கள்தான். எல்லா மண் வகைகளிலும் சாகுபடி செய்வதற்கேற்றது. நெல் அறுவடைக்குப்பின் ஜனவரி–பிப்ரவரி மாதங்களில் இதை விதைக்கலாம். இதைப் பயிரிட பிரத்யேகமான ஆரம்பச் சாகுபடி ஏதும் தேவையில்லை. இதன் விதைகளை 1½ அடி இடைவெளி கொண்ட சால்களில் ½ அடி இடைவெளியில் விதைக்க வேண்டும். இவ்வாறு விதைக்க ஏக்கருக்கு 25 ராத்தல் விதை தேவைப்படும். பருத்தி வேளாண்மைக்காக நிலத் தயாரிப்பு ஒன்றும் செய்யாததால் வயல்களில் களைகள் அதிகமாக இருக்கலாம். அவற்றை உடனுக்குடன் களைய வேண்டும். நான்கைந்து வாரங்களுக்குப்பின் மண் வெட்டியைக்கொண்டு கொத்துவதால் நெல் தாள்களும், களைகளும் நீங்குவதோடல்லாமல் கெட்டியான மண்ணும் மென்மை பெறுகிறது. இந்நிலையில் செடிகளுக்கு இரு புறங்களிலும் மண் அணைக்கவேண்டும். நல்ல மகசூல் பெற உற்ற சமயத்தில் தக்க பயிர்ப் பாதுகாப்பு முறைகளை கையாளவேண்டும். ஒரு ஏக்கருக்கு 800 ராத்தல் வரை பருத்தி மகசூல் கிடைக்கிறது. இழை நீளம் 15/16 அங்குலம், கட்டுமால் 37 சதவீதம்.

காய்கறி.—உணவு தானியங்களின் உற்பத்தி பெருக்கத்தோடு காய்கறிகளின் உற்பத்தியையும் அதிகரிக்க வேண்டும். உணவு தானியங்களின் உபயோகத்தைக் குறைக்க உதவுவதோடு காய்கறிகள் நாம் அன்றாடம் உண்ணும் உணவின் அளவையும், மதிப்பையும் அதிகரிக்க உதவுகின்றன. பற்பல வகையான மண், சீதோஷ்ண நிலை பருவங்கள் ஆகியவற்றுக் கேற்ற பற்பல வகை காய்கறிகள் இருக்கின்றன. இவற்றை எளிதில் யாவரும் பயிரிடலாம். மரவள்ளிக்கிழங்கு, சர்க்கரை வள்ளிக்கிழங்கு போன்றவை களைப் பயிரிடுவதன் மூலம் மிகுதியான மகசூல் பெறலாம். காய்கறிவிதைகளை அருகிலிருக்கும் பஞ்சாயத்து யூனியன் விவசாய டிப்போவிலிருந்து பெறலாம். வீட்டுச் சுற்றுப் புறங்களிலுள்ள காலியிடங்களை வீணுக்காமல் காய்கறிகளைப் பயிரிட வேண்டும்.

அரசினர் தென்னை நாற்றங்கால்களில் கிடைக்கும் தென்னங் கன்றுகளின் விவரம்

கிடைக்குமிடம்	கிடைக்கும் காலம்.	கையிருப்பு எண்ணிக்கை.	ஒன்றின் விலை.
தென்னை நாற்றங்கால்—			ரூ. ந.பை.
பட்டுக்கோட்டை, தஞ்சாவூர் மாவட்டம்	பிப்ரவரி 1963.	5,000	0 65
செங்கோட்டை திருநெல்வேலி மாவட்டம்.	பிப்ரவரி 1963.	4,000	0 65
விசுவாசபுரம், கன்னியாகுமரி மாவட்டம்.	பிப்ரவரி 1963.	2,000	0 65

ஏர்வளம் பெருக்கி எதிரியை விரட்டுவோம்!

குறுகிய கால கரும்பு விதைப் பயிர்

கே. வி. தானியேல், பி. எஸ்ஸி. ஏஜி. எஸ். டி. ராஜன், பி.எஸ்ஸி., பி. எஸ்ஸி. ஏஜி.,
(மத்திய கரும்பு ஆராய்ச்சி பண்ணை, கடலூர்)

திருந்திய முறை :

ஆறு முதல் எட்டு மாத வயதுள்ள கரும்பினை விதையாகப் பயன்படுத்தலாம். முழுக்கரும்பினை அடியோடு வெட்டி கரணைகளாக்கி நடவு செய்யவும். மிருதுவாகவும், வளப்பமாகவும் நோய், நொடி, பூச்சி முதலியவைகளால் பாதிக்கப்படாத தூய்மையான கரும்பையே விதைக் கரணைக்குத் தேர்ந்தெடுக்கவும். வெட்டிவிட்ட அடி பாகத்தை அப்படியே மறுதாம்பாக (Ratoon) விட்டு விடலாம்.

நாற்றங்கால் தயாரிக்கும் முறை:

* வடிகால் வசதியோடு கூடிய பத்து செண்டு அளவு நிலத்தை தேர்ந்தெடுக்கவும்.

* இரும்பு கலப்பைகளின் உதவி கொண்டு ஆறுமுறை உழவும். அதிக பரப்பளவுள்ள நிலத்தை டிராக்டரின் உதவியால் உழுது, பண்படுத்தவும்.

* எக்கருக்கு இருபது வண்டி வீதம் தொழு உரம்போட்டு, மறுமுறையும் கலப்பையினுல் உழுது எருவை மண்ணோடு கலக்கவும்.

* பின், 'பட்டி' அடித்து நிலத்தை நன்ருக சமன் படுத்தவும். விக்டரி கலப்பையின் உதவியாலோ அல்லது மண்வெட்டியினுலோ 3′ 4′ இடைவெளிக்கு ஒன்ருக கிடங்குகள் எடுக்க வேண்டும். ஒவ்வொரு கிடங்கும் சுமாராக 30 லிருந்து 40 அடி நீளம்தான் இருக்க வேண்டும். அப்படி எடுப்பதால் தண்ணீர் பாய்வதற்குச் சுலபமாக இருக்கும்.

* கிடங்கின் அடிபாகத்தில் ஏக்கருக்கு இருபது இராத்தல் வீதம் பி. எச். சி. 10 சத மருந்தைத் தூவவேண்டும்.

* மண்வெட்டியால் அடிபாகத்தை கொத்தும்போது அம்மருந்து நன்ருக மண்ணோடு கலக்கப்பட்டு கறையான் போன்ற பூச்சிகளினுல் விதைக் கரணைகளுக்கு யாதொரு சேதமும் ஏற்படாது தடுக்கப்படுகிறது.

* விதைக்கரணைகளை 'அரிடான்' என்ற பூஞ்சான மருந்தில் நனைத்து நடவேண்டும்.

பயிர் வளர்ச்சியின்போது கவனிக்கவேண்டிய குறிப்புகள்

* கலப்பில்லாது தேர்ந்தெடுக்கப்பட்டு, நாற்றங்கால்களில் நடப்பட்ட கொழுந்தாடையிலிருந்து 25 அல்லது 30 நாட்களுக்குள் பூர்ண முளைப்பு அடைந்திருப்பதைக் காணலாம்.

* பயிரின் இடையில் விளைந்த புல், பூண்டுகளை களை ஜூனியர் கலப்பை (Junior Hoe) உபயோகித்து நீக்கவும்.

* எக்கருக்கு $1\frac{1}{2}$ மூட்டை வீதம் அமோனியம் சல்பேட் உரமிட்டு களைக்கொத்தால் மூடிய பின் நன்ருக தண்ணிர் பாய்ச்சவும்.

* இரண்டு மூன்று தினங்கள் சென்றபின் இளங் குருத்துப் பூச்சி அடிக்காவண்ணம் 'என்டிரின்' அல்லது ஃபாலிடால் தெளிக்கவும்.

* பயிரின் வயது 60—லிருந்து 90 நாட்கள் அடைந்த பின் இரண்டாவது தடவை உரம் வைக்கவும்.

* குறைந்தது $1\frac{1}{2}$ மூட்டை அமோனியம் சல்பேட் வைத்து கிடங்கை அணைத்துவிடவும். நிலத்தின் ஈரத் திற்குத் தகுந்தவாறு தண்ணீர் பாய்ச்சவும்.

விதைநடவுக்கு ஏற்ற பட்டம்

குறுகிய கால கரும்பு நாற்றங்கால் நடவுக்கு இரண்டு பட்டங்கள் உகந்தன. பருவகால நடவிற்கு (Main Season Planting) நாற்றங்காலை ஜூன்–ஜூலை மாதங்களிலும் பிரத்தியேகப்பட்ட (Special Season) நடவுக்கு டிசம்பர், ஜனவரி மாதங்களிலும், நாற்றங்கால் தயார் செய்ய வேண்டும்.

நாற்றங்காலின் நன்மைகளும், அனுகூலங்களும்.

(1) நாற்றங்காலில் நடப்பட்ட விதைக் கரணைகளின் முளைப்புத் தன்மை 90 முதல் 95 சதவீதம் உள்ளது. (2) பத்து செண்டு நாற்றங்காலிலுள்ள விதைக் கரும்பு களைக் கொண்டு ஒரு எக்கருக்கு குறையாமல் நடவு செய்யலாம். (3) நாற்றங்கால் விதைக்கரணைகள் அதிக வீரியம் நிறைந்ததாகக் காணப்படுகின்றன. (4) கரும்பில்போக்கு போதல் குறைவான அளவில் காணப்படுவதால் பருக்களும் முளைத்து நிலத்தில் இடைவெளி இல்லாமல் இருக்கச் செய்கின்றது. (5) மொத்த கரும்பின் எண்ணிக்கை (Population) அதிகமாகவிருக்கும். (6) பன்னிரண்டு மாதம் வளரவேண்டிய கரும்பை 6 முதல் 8 மாதத் திற்குள் வளர விடுவதால், மீண்டும் நெல் அல்லது சணப்பை, தக்கைபூண்டு போன்ற பசுந்தாள் உரப்பயிர் வைத்து பயிர் செய்து இலாபம் அடையலாம். இவ்விதம் மீண்டும், மீண்டும் தக்க முறையில் பயிர் செய்வதால், நிலம் பண்பட்டு களையின் உபத்திரவம் குறையலாம். அடுத்து கரும்பு நடுவதற்கு நிலம் நன்கு பண்பட்டதாக இருக்கும்.

குறுகிய காலப் பயிர் நிறைய பயிர் செய்வோம்

வரவு செலவு பட்டியல்

குறுகிய காலப்பயிர் செய்ய நாற்றங்கால் வரவு-செலவு பட்டியல் (ஏக்கருக்கு) பின்வருமாறு:—

முன் பராமரிப்பு:—

	ரூ. ந.பை
டிராக்டரால் உழுதல் (இருமுறை) (ஏக்கருக்கு ரூ. 16 வீதம்).	32—00
மண்ணை பண்படுத்துதல் (Harrowing) (ஒரு முறை).	12—00
மூலே, வரப்பு சீர்செய்து, பட்டியால் நிலத்தை சமன்படுத்தல்.	5—00
விக்டரி கலப்பையால் பாரமைத்தல் (ஒரு ஜதைக்கு).	5—00
பார்களை பண்படுத்தல், வாய்க்காலமைத்தல்	10—00
மொத்தம் ..	64—00

(2) விதைக்கரணைகளை நடுதல் —

விதைக்கரும்பின் விலே (ஏக்கருக்கு 3 டன் வீதம்).	135—00
விதைக்கரணைகளை வெட்டி மருந்தில் துவைத்து நடவு செய்தல் (4 அவுன்சு அரிடான் மருந்தின் விலே ரூ. 1—50 உட்பட)	30—00
மொத்தம் ..	165—00

(3) உரமும், உரமிடுதலும்—

தொழு உரம் அல்லது கம்போஸ்டு 10 டன் (20 வண்டி) (வண்டி ரூ. 4 வீதம்).	80—00
அமோனியம் சல்பேட் உரமிடுதல்—3 மூட்டை (ஒரு மூட்டை 224 ராத்தல் எடை, ஒரு ராத்தல் விலே 18 ந. பை. வீதம்) (கரும்பு நட்ட 45-வது நாள் $1\frac{1}{2}$ மூட்டை, 90-வது நாள் $1\frac{1}{2}$ மூட்டை).	121—00
தொழு உரத்தை பரப்பி கலப்பையால் மூடுதல், அமோனியம் சல்பேட் உரமிடுதல்.	10—00
	211—00

(4) பின் பராமரிப்பு:—

களை கொத்தல் (இருமுறை) (களைகொத்தால்)	21—00
ஜுனியர் கலப்பை ஓட்டுதல் (ஒரு முறை)	5—00
களை கொத்தல் (ஒரு முறை) (மண்வெட்டியால்).	10—00
மண் அணைத்தல்	13—50
மருந்தடித்தல் (எண்டிரின்—16 அவுன்சு)	8—00
மொத்தம் ..	57—50

(5) நீர் இறைத்தல்—

நீர் கட்டுதல்	40—00
இயந்திர வாடகை செலவு (15 முறை இறைக்க) (ஏக்கருக்கு ரூ 8 வீதம்).	120—00
மொத்தம் ..	160—00

(6) கரும்பு அறுவடை—

	ரூ. ந.பை.
கரும்பை வெட்டி சோலே உரித்து கட்டுக் கட்டி எடுத்து செல்லுதல்	100—00
	100—00

லாபம் (ஏக்கருக்கு)—

ஒரு ஏக்கருக்கு மகசூல் ..	35 டன்
ஒரு ஏக்கருக்கு பராமரிப்பு செலவு ..	758—00
ஒரு ஏக்கருக்கு வரவு 35 டன் ரூ. 45 வீதம்	1,575—00
ஒரு ஏக்கரின் நிகர லாபம்	817—00

மேலே கூறிய கருத்துக்களை ஆராய்ந்து பார்க்குமிடத்து நாற்றங்கால் கரும்பு, நடவிற்குப் பெரிதளவும் பயன்படுகிறது என்பதைக் காண்கிறோம். இப்படி நாற்றங்காலில் உற்பத்தி செய்து பயிர் செய்வதால், நமக்கு விதை மிகத் தூய்மையானதும், குற்றம், குறை, நோய், நொடி அற்றதும், மீண்டும் மறு தாம்பு விடக்கூடிய தன்மையுடையதாகவும் கிடைக்கிறது என்பதை அறிந்தோம். இம்முறைகளின் பயனுல் நல்ல விதைகள் கிடைக்கும்பொழுது ஏக்கர் ஒன்றுக்கு 800 ரூபாய்க்குக் குறைவின்றி லாபம் பெறுகிறோம். மேலும் சென்னை மாநில கரும்பு அபிவிருத்தி அதிகாரி மூலமாக புதிய முறையில் பயிர் செய்ய அரசாங்க உதவி (Subsidy) கிடைக்கிறது. ஏக்கருக்கு ரூ. 100 விதை நாற்றங்கால் உற்பத்தி செய்யவும் அதை எடுத்து செல்ல (Transport sudsidy) ரூபாய் 20 ம் கிடைக்கிறது. எனவே, இவற்றிலிருந்து விதை நாற்றங்கால் சிறந்ததென்றும் அதனுல் பலவகையிலே லாபம் உண்டு என்றும் அறிகிறோம். ஆகவே குறைந்த செலவில் அதிக லாபத்தை அடையக்கூடிய புதிய முறைகளை ஏற்று நன்முறையில் பயிர்த்தொழில் வளர்ச்சி அடைய பாடுபடவேண்டியது நமது கடமைகளில் ஒன்றுகும்.

உயர்தர பலவிதச் சிறந்த ஜாதி

காய்கறி விதைகள்

இதர புஷ்பத் தோட்ட விதைகள்
திடமான நம்பிக்கை வாய்ந்த உண்மை ஜாதி

ஒட்டு மாஞ்செடிகள்

எலுமிச்சை, சாத்துக்குடி முதலிய

பலவிதப் பழச் செடிகள்

அலங்கார, வாசனை புஷ்பச் செடிகள்
பூச்சிநோய் மருந்துகள்
கலப்பு உரங்கள்
உபகரணங்கள்

கிடைக்குமிடம் :

ராஜா பண்ணைத் தோட்டம்

2, டாக்டர் சிங்காரவேலு தெரு
தியாகராயநகர் சென்னை-17

தந்தி : RAJSEED. — போன் : 42262.

எண்ணெய் வித்து அபிவிருத்தியும் நிலக்கடலை தீவிர சாகுபடி திட்டமும்

எஸ். ஜி. அய்யாதுரை, எண்ணெய் வித்து நிபுணர், விவசாய ஆராய்ச்சி நிலையம், கோவை.

உண்ண உணவு, உடுக்க உடை, வசிக்க வீடு ஆகிய இம் மூன்றுமே மனிதனுக்கு அடிப்படைத் தேவைகள். பல மக்கள் கொண்ட ஒரு நாடு சுபிட்சம் பெற வேண்டுமாயின் உணவுப் பொருட்கள் உற்பத்திப் பெருக்கத்துடன் வாணிக விவசாயப் பொருட்களான எண்ணெய் வித்துக்கள், பருத்தி, சணல், தேயிலை, புகையிலை முதலியவற்றின் உற்பத்தியையும் அதிகரிப்பது மிகவும் அவசியம். இவற்றை வெளிநாடுகளுக்கு பெருமளவு ஏற்றுமதி செய்வதின் மூலம் நாட்டின் பொருளாதாரத்தை அதிகரிகக்ச் செய்ய முடியும்.

மொழிவாரி மாகாணப் பிரிவினைக்குப்பின் தமிழ் நாட்டில் 22 லட்சம் ஏக்கர் பரப்பளவில்தான் தென்னை நீங்கலாக உள்ள மற்ற எண்ணெய் வித்துப் பயிர்கள் சாகுபடி செய்யப்படுகின்றன. ஆகவே இதன் காரணமாக சென்னை மாநிலத்தில் ஏற்பட்ட எண்ணெய் வித்து உற்பத்தி குறைவை எப்படி ஈடுசெய்வது என்ற பிரச்னை தோனறியுள்ளது. தற்பொழுது உணவுப் பண்டங்கள் தயாரிப்பதற்கு உபயோகிக்கப்படும் தாவர எண்ணெய்களில் ஒரு பாகம் சோப்பு, மற்றும் இயந்திரத் தொழில் சம்பந்தமான காரியங்களுக்கும் பயன்படுத்தப் படுகிறது. இதன் காரணமாகவும், எண்ணெய் உற்பத்தியை அதிகரிக்க வேண்டியிருக்கிறது.

உயர்ரக பொறுக்கு வித்துக்களை பயன்படுத்துவதின் மூலம், நவீன சாகுபடி முறைகளைக் கையாளுவதின் மூலமும் எண்ணெய் வித்துக்களின் உற்பத்தியைப் பெருக்க முடியும். பொறுக்கு விதைகளைப் பொறுத்த மட்டில் விவசாய இலாகாவின் மூலம் விவசாயிகளுக்குக் கிடைத்த போதிலும் ஒவ்வொரு வருடமும் அரசாங்கத்தையே சார்ந்திருப்பது ஏற்றதல்ல. ஒரு வருடம் உயர்ரக வித்துக்கள் கிடைக்குமானல் அவற்றை அதிகரித்து அடுத்து வரும் ஆண்டில் அவ்விதைகளைத் தானும் உபயோகித்து தன்னைச் சுற்றியுள்ள மற்ற விவசாயிகளுக்கும் பகிர்ந்தளித்து உயர்ந்த தினுசுகளை அதிகளவில் பரவும்படி பாடுபட வேண்டும்.

இந்திய மத்திய எண்ணெய் வித்துக் குழுவின் உதவி கொண்டு சென்னை அரசாங்கம் 1955-ம் ஆண்டு எண்ணெய் வித்து விஸ்தரிப்புத் திட்டம் ஒன்றை அமுலுக்குக் கொண்டு வந்தது. இத் திட்டத்தின் மூலம் நிலக்கடலை, எள், ஆமணக்கு முதலியவற்றின் உற்பத்தியை 1956-ம் ஆண்டு மார்ச் மாத முடிவிற்குள் 43,314 டன் அதிகப் படியாக அடைய முடிந்தது.

இரண்டாவது திட்ட காலத்தில், 70 ஆயிரம் டன் கூடுதல் உற்பத்தியை அடையத் திட்டமிடப்பட்டது. அத்துடன் நீர்ப் பாசனத் திட்டங்கள் உள்ள பிராந்தியங்களில் தீவிர எண்ணெய்வித்துச் சாகுபடி செய்யும் நோக்கத்துடன் மற்றுமொரு விசேஷத் திட்டமும் அமுலாக்கப்பட்டது. இத் திட்டங்களுக்கென விவசாயிகளுக்கு உயர்ரக விதைகளை வழங்குவதற்கு பொள்ளாச்சி, ஸ்ரீவில்லிப்புத்தூர், முள்ளுவாடி (ஆத்தூர்), திண்டிவனம், பவானிசாகர் ஆகிய இடங்களில் விதைப் பண்ணைகள் நிறுவப்பட்டன. அத்துடன் கோயம்புத்தூர், சேலம், தென் ஆற்காடு ஆகிய மூன்று மாவட்டங்களிலும் விசேஷப் பயிர் பாதுகாப்பிற்கென்று பூச்சி, நோய் மருந்துகளைப் பாதி விலைக்கு விற்பதுடன், மருந்தடிக்கும் கருவிகளும் விநியோகிக்கப்பட்டன. இவற்றின் மூலமாக இரண்டாவது திட்ட முடிவில் சுமார் 116,000 டன் அதிக உற்பத்தியை அடைய முடிந்தது.

மூன்றுவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் இரண்டாவது திட்ட காலத்தில் செயலாற்றப்பட்ட இரண்டு அபிவிருத்தித் திட்டங்களையும் ஒன்றுக்கி "இணைக்கப்பட்ட எண்ணெய் வித்து அபிவிருத்தித் திட்டம்" என்பதொன்றை அமுலாக்கி அதன் மூலம் 290,000 டன் எண்ணெய் வித்துக்களை அதிகப்படியாக உற்பத்தி செய்யத் திட்டமிடப் பட்டுள்ளது.

பயனற்ற தரிசு நிலங்களையும், பயிரிடப்படாத ஏனைய இடங்களையும் பயன்படுத்திப் பயிர் செய்வதாலும், ஒரு போக நிலங்களுக்கு தக்க நீர் வசதிகளை அளித்து இரு போக நிலங்களாக மாற்றிப் பயிர் செய்வதாலும், மற்ற பயிர்களிடையே எண்ணெய் வித்துப் பயிர்களையும் விளைவிப்பதாலும் சுமார் 5,80,000 ஏக்கர் நிலங்களில் 175,000 டன் எண்ணெய் வித்துக்களை அதிகமாக உற்பத்தி செய்ய ஏது உண்டு. இவற்றுடன் பொறுக்கு விதைகள், இரசாயன உரங்கள், நூதன உழவு முறைகள் இவற்றைப் பயன்படுத்துவதாலும், தக்க காலத்தில் பூச்சி, நோய்களைத் தடுப்பதற்கு மருந்தடிப்பதாலும், இன்னும் அதிகமாக சுமார் 2,14,000 ஏக்கர் நிலப்பரப்பில் 115,000 டன் எண்ணெய் வித்துக்களை உற்பத்தி செய்ய வழியுண்டு.

இத் திட்டத்தின் வெற்றி விவசாயப் பெருமக்களாகிய உங்களின் ஒத்துழைப்பைப் பொருத்தேயுள்ளது. இந்த எண்ணெய் வித்து அபிவிருத்தித் திட்டத்திற்கு அனுகூலமாக பயிர் போட்டித் திட்டம், ஆமணக்கு வித்துக்களை இனுமாக விநியோகிக்கும் திட்டம், இரசாயன உரமிடுவதற்கென கடனுதவித் திட்டம் ஆகியவையும்

செயல்பட்டு வருகின்றன. நிலக்கடலைப் பயிருக்குத் தேவையான இரசாயன உரங்களை வாங்குவதற்கென மானுவாரி பயிருக்கு 40 ஆயிரம் எக்கர் நிலப்பரப்பிற்கென 10 லட்சம் ரூபாயும், பாசனப் பயிருக்கு 20 ஆயிரம் எக்கர் நிலப் பரப்பிற்கென 10 லட்சம் ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளன. இந்தக் கடனுதவி பாசனப் பயிர் விளைவிக்கும் எக்கர் ஒன்றுக்கு ரூ. 50 வீதமும், மானுவாரிப் பயிருக்கு எக்கர் ஒன்றுக்கு ரூ. 25 வீதமும் விவசாயிகளுக்குக் கொடுக்கப் படும். இதனைப் பயன்படுத்திக்கொண்டு எக்கர் ஒன்றுக்கு 100 ராத்தல் அமோனியம் சல்பேட், 125 ராத்தல் சூப்பர் பாஸ்பேட், 50 ராத்தல் மூரியேட் ஆப் பொட்டாஷ் ஆகிய இரசாயன உரங்களை நிலக்கடலைப் பயிருக்கு இட்டு விளைவை அதிகரிக்க விவசாயிகள் வேண்டப்படுகின்றனர்.

பயிர் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ், 1961-ம் வருஷத்தில் கோயம்புத்தூர் ஜில்லாவைச் சேர்ந்த பொள்ளாச்சிப் பகுதியில் 10 ஆயிரம் எக்கர்களிலும், இவ்வாண்டு தென்னாற்காடு ஜில்லாவைச் சேர்ந்த விருத்தாச்சலப் பகுதியில் சுமார் 6,000 எக்கர்களிலும் நிலக்கடலையின் சிவப்புக் கம்பளிப் பூச்சியை ஒழிக்க ஆகாய விமானம் மூலம் மருந்து தெளிக்கப்பட்டது. நம் அரசாங்கம் விவசாயிகளுக்கு எல்லா வகைகளிலும், எல்லா சமயங்களிலும் உதவ முன் வருகின்றனர் என்பதற்கு இவை போன்ற காரியங்கள் சான்றாக விளங்குகின்றன.

நிலக்கடலை தீவிர சாகுபடித் திட்டம்.

மேற்கூறிய விவசாய விஸ்தரிப்புத் திட்டங்களன்றி 1962-ம் வருஷம் ஜூன் மாதம் முதல் தேதியிலிருந்து நிலக்கடலைத் தீவிரச் சாகுபடித் திட்டமொன்று தென் ஆற்காடு ஜில்லாவின் சில பகுதிகளில அமுலாக்கப்பட்டு வருகின்றது. இத் திட்டம் தஞ்சை மாவட்டத்தில் நெற் பயிருக்கென நடத்தப்பட்டு வரும் தீவிர சாகுபடி திட்டத்தைப் போன்றது. இதற்காகும் செலவின் ஒரு பாகத்தை இந்திய மத்திய எண்ணெய் வித்துக் குழுவினர் கொடுத்து உதவுகின்றனர்.

இத் திட்டத்தின்படி குறிஞ்சிப்பாடி, பண்ருட்டி, கடலூர் முதலிய விஸ்தரிப்புத் திட்ட இடங்களில் நிலக்கடலையின் உற்பத்தியைப் பெருக்க சாத்தியமாகும். சாகுபடி முறையை தீவிரமாகக் கையாண்டு இதனால் உற்பத்தியைப் பன்மடங்கு பெருக்க வழி வகுக்கப்படும். இவ் வட்டாரங்களிலுள்ள நிலக்கடலைப் பயிரிடும் விவசாயிகளும், ஏனைய விவசாயப் பெருமக்களும் இத் திட்டத்தைச் செயல்படுத்துவதில் அரசாங்கத்துக்குத் தங்கள் முழு ஒத்துழைப்பையும் அளிப்பது கடமையாகும். இப் பாகங்களில் விசேஷமாக விவசாய விளக்குநர்களின் மூலம் பொதுமக்களுக்கு நிலக்கடலைச் சாகுபடியின் திருந்திய முறைகளை எடுத்துக் கூறுவதுடன் ஆங்காங்கே, விவசாயிகள் தாங்களே கண் கூடாகப் பார்த்து தெரிந்துகொள்ளுமளவிற்கு செயல் முறை விளக்கங்கள் நிறுவப்படும். விவசாயிகளுக்குத் தக்க ஊக்கம் கொடுப்பதின் மூலம் நிலக் டலை விளைவிக்கப் படாத நிலத்தில் 2-வது போகமாக நிலக்கடலை விளைவிக்கப் படும். இவ்வாறு இரு நெற்போகங்களுக்கும் இடையேயுள்ள காலத்தில் நிலக்கடலை பயிரிடப்பட்டு, ஆண்டொன்றுக்கு 200 எக்கர் வீதம் 3-ம் திட்ட கால முடிவிற்குள் 800 எக்கர் நிலத்தில் 2-வது போக நிலக்கடலைப் பயிர் விளைவிக்கத் தேவையான எல்லா முயற்சிகளும் எடுக்கப் படும். மானுவாரி பூமிகளில் எங்கெங்கே சோளம், கம்பு, வரகு முதலிய சிறுதானியங்கள் இலாபகரமின்றி பயிரிடப்பட்டு வருகின்றனவோ அங்கெல்லாம் நிலக் கடலையை மற்ற பயிர்களுடன் மாற்றிச் சாகுபடி செய்ய வழிவகைகள் நிறுவப்படும். இதன் வாயிலாக 400 எக்கர் நிலத்தில் அதிகப்படியாக நிலக்கடலை பயிராக ஏதுவுண்டு.

இத் திட்டத்தின்கீழ் மேற்கூறிய இம் மூன்று வட்டாரங்களிலுள்ள விவசாயிகளுக்கு மானுவாரிப் பயிருக்கென எக்கருக்கு 75 ரூபாயும் பாசனப் பயிருக்கென எக்கருக்கு 200 ரூபாயும் முன்பணமாக அரசாங்கம் கொடுத்து உதவி செய்கின்றது. இதனால் ஏறக்குறைய 40 சத வீதம் உற்பத்தியைப் பெருக்க முடியும் என்று கணக்கிடப்பட்டுள்ளது. சுமார் 12,500 டன் நிலக்கடலை அதிகமாக உற்பத்தி செய்ய வழியிருக்கின்றது.

இத் திட்டம் மக்களின் திட்டம் அரசினர் இதுபோன்ற திட்டங்களைச் செயல்படுத்தும் சமயத்தில் "காற்றுள்ள போதே தூற்றிக்கொள்" என்றபடி விவசாயிகளனைவரும் ஊக்கத்துடன் முன்வந்து இச் சலுகைகளை முற்றும் பயன் படுத்திக்கொள்ள வேண்டும்.

போர் வீரர் போர் முனையில் தங்கள் கடமையைச் செய்கிறார்கள். விவசாயிகளே! விஞ்ஞான முறையில் உற்பத்தியைப் பெருக்கி உங்கள் கடமையைச் செய்கிறீர்களா

பங்களூர் கத்தரிக்காய்

சி. கே. ராஜகோபாலன், உதவியாளர், சிறுதானியப்பண்ணை, கோவை–3.

பங்களூர் கத்தரிக்காய் சுலபமாக சாகுபடி செய்யக் கூடிய ஒரு நெடுங்காலக் காய்கறிப் பயிர். இது பங்களூர் பகுதிகளில் அதிகமாக விளைவதால் இப்பெயரை உடையது. இதை மற்ற பிரதேசங்களிலும் சாகுபடி செய்யலாம்.

தண்ணீர்த்தேக்கம் இல்லாத செழிப்பான நிலங்களில் இது நன்றாக வளரும். கொடியில் முதலில் காய்க்கும் நல்ல காய்களை விதைக்காக விட்டு வைக்கலாம். அவை நன்றாக முற்றினால் கொடியிலிருந்தே முளைக்கத்துவங்கும். காய்கள் முளைத்து $\frac{1}{2}$ அடி துளிர் வெளி வந்ததும் அவைகளைப் பறித்து மண் தொட்டிகளில் நடவேண்டும். கொடி இரண்டு அடி உயரம் வளர்ந்தபிறகு இதைப்பறித்தெடுத்து நிலத்தில் நடவேண்டும். இளம் நறுக்குத் துண்டுகளையும் நடலாம்.

* நிலத்தை நன்றாக உழுது பண்படுத்திய பிறகு, 1^2 அடிக்கு ஒன்றாக $2' \times 2' \times 2'$ அளவு உள்ள குழிகளை வெட்டி மக்கிய எரு போட்டுத் தயார் செய்ய வேண்டும்.

* நீர்ப்பாசன வசதிக்காக குழிகளை வாய்க்கால்கள் வெட்டி இணைக்கவேண்டும்.

* முளைத்த காயை குழியில் நட்டு, கொடி ஓடியாதிருக்க பக்கத்தில் ஒரு மூங்கில் நட்டு கொடியை அதோடு சேர்த்து கட்டிவிட வேண்டும்.

* தை மாதத்தில் நடுதல் நலம். மழை கிடைக்கும் வரையில் போதிய நீர் பாய்ச்ச வேண்டும்.

* இக்கொடி மிக வேகமாக வளர்ந்துவிடும். இதற்கு பந்தல் போடுவது அவசியம்.

* ஆடி மாதத்தில் கொடி பூக்கத் துவங்கி ஆவணியிலிருந்து மார்கழி வரையில் காய்கள் கொடுக்கும். காய்த்து முடிந்த பிறகு பந்தலின் மேல் புதற்போல் மண்டிக் கிடக்கும் கொடிகளை வெட்டிவிட்டால் பத்து அல்லது பதினைந்து நாட்களில் புதுக்கொடிகள் வளர்ந்து மீண்டும் இரண்டு மாதத்தில் காய்க்கத் துவங்கும்.

* சித்திரை மாதத்தில் மீண்டும் முன்போல் கொடியை வெட்டி விடவேண்டும்.

* இப்படியே ஐந்து வருடங்கள் வரையில் கொடி பலன் அளிக்கும். பின் புதுச் செடிகளை நடவேண்டும்.

* நன்றாக வளர்ந்த ஒரு கொடியிலிருந்து சுமார் 600 காய்கள் கிடைக்கும்.

வீட்டின் சுற்றுப்புறங்களில் உள்ள இடங்களில் இதை சாகுபடி செய்யலாம். உழைப்புக்கு தகுந்த ஊதியமும்



சுவையும், சத்தும் ஒன்றுபோல் அமைந்துள்ள காய்களைத் தரக்கூடிய இப்பயிரை சாகுபடி செய்து பெரும் பலனடையுங்கள் !

(குறிப்பு.—'இந்தியன் ஹார்ட்டிகல்சர்' 1962 ஜனவரி–மார்ச் இதழில் வந்துள்ள கட்டுரையை தழுவி எழுதியுள்ளது).

சூபர்பாஸ்பேட்டை



உபயோகித்து உங்கள் வயல்களின் சாகுபடியை அதிகரியுங்கள்

நைட்ரோஜன் உரத்துடன் சூபர்பாஸ்பேட்டை சேர்த்தால் நிலத்தின் வளம் அதிகரிக்கும். விளைச்சல் அதிகம் காணும். பயிரின் தரமும் உயரும்—இவைகளினுல் உங்கள் வயல்களிலிருந்து அதிக லாபமும் கிடைக்கும்.

சூபர்பாஸ்பேட் ஏன் உபயோகிக்க வேண்டும்?

- சூபர்பாஸ்பேட் எல்லா பயிர்களுக்கும் போடத் தகுதியான பாஸ்பேட உரம்—பயிர் வளர்ச்சிக்கு இணையற்றது.
- சூபர்பாஸ்பேட் சிறு நாற்றுகளின் அபிவிருத்திக்கு மிகவும் அவசியம். மேலும் பயிர்களின் வேர்களை பெருக செய்வதுமல்லாமல், அவைகளை சீக்கிரமாக முதிரசெய்து தான்ய அபிவிருத்தியையும் கொடுக்கிறது.
- சூபர்பாஸ்பேட்டில் 16% தண்ணீரில் கரையும் பாஸ்பாரிக் அமிலம் இருக்கிறது. எனவே பயிருக்கு சீக்கிரமாகவும், சுலபமாகவும் பயன்தருகிறது.

உங்கள் வயலுக்கு சூபர்பாஸ்பேட் தேவை

முழு விபரங்களுக்கு : தென் பிராந்திய மண்டலக்குழு, இந்திய உரச்சங்கம்
தபால் பெட்டி 12, சென்னை-1

FDS/FAI/1 A TM

கருங்கண்ணி ஆராய்ச்சியின் முன்னேற்றம்

(C. K. ராமச்சந்திரன், R. S. அன்னப்பன், H. பூமிநாதன்.)

தமிழ் நாட்டின் விவசாய, தொழிலியல் பொருளாதாரத்தில் பருத்தி ஒரு முக்கிய இடம் வகிக்கின்றது. தமிழ் நாட்டில் சுமார் 12 லக்ஷம் ஏக்கர் பருத்தி விளேச்சலில் உள்ளது. இதிலிருந்து ஆண்டுதோறும் சுமார் 11 லக்ஷம் பேல் பஞ்சு உற்பத்தியாக்கப்படுகின்றது பருத்தி விளேச்சலிலுள்ள விஸ்தீரணத்தில் பாதிக்குமேல், அதாவது 6 லக்ஷம் ஏக்கர்களுக்கும் மேலாக திருநெல்வேலி, இராமனுதபுரம், மதுரை, கோயம்புத்தூர், சேலம் ஆகிய மாவட்டங்களில் கருங்கண்ணி பருத்தி பயிராக்கப்படுகின்றது.

வளர்ந்து வரும் ஆலேத் தொழிலுக்கு வாழ்வளித்து வரும் கருங்கண்ணிப் பருத்தியின தரத்தை அபிவிருத்தி செய்வதற்குரிய ஆராய்ச்சிகள் 1905-ம் ஆண்டிலேயே மேற்கொள்ளப்பட்டன. அக்காலத்தில் உப்பம், நாடம், கருங்கண்ணி போன்ற ரகங்களே பயிரிடப்பட்டு வந்தன. இவை குறைந்த மகசூலேயும், தரக்குறைவான பஞ்சையுமே கொடுத்தன. இவற்றின் பஞ்சிலுல் 14-ம் நம்பர் நூலுக்கு மேல் நூற்பதற்கு முடியவில்லே. விவசாய இலாகாவினர் செய்த ஆராச்சியின் பயனுக சி 2, சி 3, சி 7, ஏ 10, கே. 1 என்ற கருங்கண்ணி ரகங்கள் உற்பத்தி செய்யப்பட்டன. பின்பு கே. 2, கே. 5 என்ற சிறந்த ரகங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இவை ஏக்கருக்கு சுமார் 100 ராத்தல் பஞ்சு மகசூல் கொடுத்ததுடன் முக்கால் அங்குல இழை நீளமும் கொண்டிருந்தன. இவற்றைக் கொண்டு 27-ம் நம்பர் நூல்வரை நூற்க முடிந்தது. கோவை, சேலம் மாவட்டங்களில் பயிரிடப்படுவதற்காக கே. 5 என்ற புதிய ரகம் 1944—45-ம் ஆண்டிலும், திருநெல்வேலி, இராமனுதபுரம், மதுரை ஆகிய தென் மாவட்டங்களில் பயிரிடப்படுவதற்காக கே. 2 ரகம் 1948-ம் ஆண்டிலும் விவசாய இலாகாவினுல் வெளியிடப்பட்டது.

கருங்கண்ணியின் தரத்தை மேலும் உயர்த்துவதற்குள்ள வாய்புகள் பல உண்டு என்று உணரப்பட்டது. இதற்குரிய ஆராய்ச்சிகள் செய்வதற்காக மாநில அரசு, இநதிய மத்திய பருத்திக் கழகம் ஆகியவற்றின் உதவியுடன் 1949-ம் ஆண்டில் "கருங்கண்ணி அபிவிருத்தித் திட்டம்" என்ற புதிய திட்டம் ஒன்று கோவில்பட்டி விவசாய ஆராய்ச்சிப் பண்ணேயில் செயல்படத் தொடங்கியது. ஏக்கருக்கு 150 ராத்தல் பஞ்சு கொடுக்கக் கூடியதும் 15/16" இழை நீளமுள்ளதும், 34 சதவிகிதம் அரைவை கொடுக்கக்கூடியதும் 40-ம் நம்பர் நூல் நூற்கக்கூடியதுமான ஒரு புதிய கருங்கண்ணி ரகத்தைத் தோற்றுவிப்பதே, இப் புதிய திட்டத்தின் குறிக்கோளாகும்.

இத்திட்டத்தில் செய்யப்பட்ட ஆராய்ச்சியின் பலனுக கே. 6 என்ற புதிய ரகம் உருவாககப்பட்டது. இது கே. 2, கே. 5 என்ற ரகங்களேவிட மகசூல் கொடுப்பதிலும், பஞ்சின் தரத்திலும் மிகவும் உயர்வாகக் காணப்பட்டது. கீழேயுள்ள பட்டியலில் இவற்றின் தரங்கள் ஒப்பிட்டுக் காட்டப்பட்டுள்ளன.

வரிசை எண்.	தரம்பற்றிய குறிப்பு.	கே. 2	கே. 5	கே. 6
1.	பருத்தி மகசூல் (ஏக்கருக்கு ராத்தலில்)	307	346	378
2.	அரைவை சத விகிதம்	32	31	33
3.	பஞ்சு மகசூல் (ஏக்கருக்கு ராத்தலில்)	98	107	125
4.	இழை நீளம் (அங்குலம்)	0·90	0·93	1·00
5.	பருத்தியின் மென்மை 10^{-6} அங்குலம்)	0·176	0·188	0·164
6.	நூற்கும் திறன் ..	27s	27s	33s
7.	நிகர லாபம் (ஏக்கருக்கு)	ரூ. 50	ரூ. 72	ரூ.107

இப்புதிய கருங்கண்ணி பருத்தியைப் பயிரிடுவதன் மூலம் பருத்தியின் உற்பத்தி அதிகமாவதுடன், பஞ்சின் தரமும் உயர்வடையும். விவசாயிகளுக்கு ஏக்கருக்குச் சுமார் ரூ. 40 அதிக லாபம் கிடைக்கும். மேலும் தென் மாவட்டங்களான திருநெல்வேலி, இராமனுதபுரம், மதுரை ஆகிய இடங்களிலும் இதை லாபகரமாகப் பயிரிட முடியும்.

இவ்வித உயர்வுகளே உணர்ந்த மத்திய பருத்திக் கழகம் கே. 2, கே. 5 ஆகிய ரகங்களுக்குப் பதிலாக, கே. 6 என்னும் புதிய ரகத்தையே விவசாயிகளுக்கு விநியோகிப்பது என்று 1957-ம் ஆண்டில் தீர்மானித்தது. இதன்படி 1959-ம் ஆண்டில் முதன் முதலாக கே. 6 (பாண்டியன்) விவசாயிகளுக்குச் சாகுபடிக்கு வழங்கப்பட்டது.

இந்தப் புதிய ரகத்தை உருவாக்கியவுடன் கருங்கண்ணித் திட்டத்தின் குறிக்கோளும் 1-1/32" இழை நீளமுள்ள மற்ருெரு புதிய ரகத்தை உருவாக்கும்படியாக மாற்றியமைக்கப்பட்டு, 1959-ம் ஆண்டிலிருந்து செயல்படத் தொடங்கியது. கடந்த சில ஆண்டுகளாகச் செய்யப்பட்ட ஆராய்ச்சியின் விளேவாக 9978-பி-5, 9833-4 என்ற இரு புதிய ரகங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இவையிரண்டும் கே. 6-ஐவிடப் பஞ்சின் தரத்திலும், உற்பத்தியளவிலும் சிறந்தன. இவற்றின் தரத்தின் சிறப்புகள், தன்மைகள் கீழேயுள்ள பட்டியலில் கொடுக்கப்பட்டுள்ளன.

வரிசை எண்.	தரம்பற்றிய குறிப்பு.	கே. 6	9978-பி 5.	9833·4
1.	பருத்தி மகசூல் (ஏக்கருக்கு ராத்தலில்).	427	545	409
2.	அரைவை சத விகிதம்	33·1	34·6	35·1
3.	பஞ்சு மகசூல் (ஏக்கருக்கு ராத்தலில்).	140	189	144
4.	இழை நீளம் (அங்குலம்)	1·01	1·03	1·10
5.	இழையின் மென்மை (10^{-6} அங்குலம்)	0·158	0·190	0·155
6.	இழையின் வலிமை (ராத்தல்/மி. கிராம்).	8·28	8·34	9·07
7.	நூற்கும் திறன்	34,s	37,s	40,s

(**குறிப்பு.**—இப்பட்டியலில் 1958-61 ஆகிய மூன்று ஆண்டுகளில் கிடைத்த அளவுகளின் சராசரி கொடுக்கப்பட்டுள்ளது).

கோவில் பட்டியிலும், கோயம்புத்தூரிலும் இவ்வாராய்ச்சி தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. தற்போது ஆராய்ச்சியிலுள்ள ரகங்களின் சிறப்புகளே நோக்குமிடத்து, இத்திட்டத்தின் குறியளவினே வெகு சீக்கிரத்திலேயே அடைந்து விடலாம் என்ற நம்பிக்கை ஏற்படுகின்றது.

மணிச்சத்தும் மணிச்சத்துள்ள உரங்களும்

(S. N. விவேகானந்தம், B.SC. (Ag)., இரசாயன உதவியாளர், பிராந்திய ஆராய்ச்சி நிலையம், ஆடுதுறை.)

வேளாண்மை சிறந்து விளங்கி உற்பத்தி பெருகவேண்டுமாயின் நிலம் வளமுடையதாக இருக்க வேண்டும். வளமுள்ள நிலத்தில் பயிருக்குத்தேவையான தழைச் சத்து, மணிச்சத்து, சாம்பல் சத்து இருக்கவேண்டும். நாம் சாகுபடி செய்யும் நஞ்சை, கரிசல், செம்மண் நிலங்களில் மணிச் சத்து மிகக் குறைந்த அளவில் இருக்கின்றது. சாதாரணமாக நஞ்சையில் மணிச்சத்து ஆயிரத்தில் 12 பங்கும், கரிசல் நிலத்தில் ஆயிரத்தில் 3 பங்கும் செம்மண் நிலத்தில் ஆயிரத்தில் 5 பங்கும் இருக்கின்றது. இவ்வாறு இருந்தும் இதில் மூன்றில் ஒரு பங்கு தான் பயிர்களுக்குக் கிடைக்கும் நிலையில் இருக்கின்றது. ஆனால் ஆண்டு தோறும் பயிர் செய்யப்படும் செடிகள் மணிச் சத்தை உட்கொள்வதால் மண்ணில் மணிச் சத்து குறைகின்றது. உதாரணமாக ஒரு எக்கர் நிலத்திலிருந்து நெல், 23 இராத்தல் மணிச்சத்தும், பருத்தி 29 இராத்தல் மணிச்சத்தும், கரும்பு 68 இராத்தல் மணிச்சத்தும் உட்கொள்கின்றன. ஆகையினால் நன்கு விளைச்சல் தர மணிச் சத்துள்ள உரங்களை பயிர்களுக்கு இடவேண்டிய அவசியம் ஏற்படுகின்றது. மணிச்சத்து செடியின் வளர்ச்சிக்கு மிகவும் இன்றியமையாதது. மணிச் சத்தின் முக்கிய வேலைகள் பின்வருமாறு :—

1. செடியின் உயிர் அணு (Cell) வளர்ச்சி பெறுவதற்கும், கொழுப்பு, புரதப்பொருள்கள் தயாரிப்பதற்கும் மணிச்சத்து உதவுகின்றது.

2. நன்ருக பூத்துக் காய்ப்பதற்கு உதவுகின்றது.

3. கதிர்களில் தானியங்களை அதிகமாக உண்டாக்கி தழைச் சத்தினால் ஏற்படும் தீங்கைத் தடுக்கின்றது.

4. வேர்கள் நன்கு படர்ந்து வளர்வதற்கு ஏதுவாகின்றது.

5. செடியின் தண்டிற்கு பலம் கொடுத்து சாயாமல் காக்கின்றது.

6. தீவனப் பயிரும், கீரை வகைகளும் அதிக உயிர்ச் சத்துக்கள் பெற உதவுகின்றது.

7. ஒரு சில நோய்களை தடுக்கும் தன்மை பெறுகின்றது.

ஆகையினால் செடியின் வளர்ச்சிக்கு மணிச்சத்து மிக முக்கியம் என்பது தெரிகின்றது. மணிச்சத்தை மண்ணில் போட்டதும் பல இரசாயன மாறுதல்கள் ஏற்படுகின்றன. அமிலத்தன்மையுள்ள நிலத்தில் மணிச்சத்தானது மண்ணில் இருக்கும் இரும்பு, அலுமினியத்துடன் சேர்ந்து கரைக்க முடியாத இரும்பு, அலுமினிய பாஸ்பேட்டாக மாறுகின்றது. இக் கூட்டப் பொருளில் உள்ள மணிச் சத்தை பயிர்களின் வேர்கள் உட்கொள்ள முடிவதில்லை, களர் நிலங்களில் மணிச்சத்துள்ள உரங்களை இட்டதும் மண்ணில் உள்ள சுண்ணாம்புடன் கலந்து செடி உட்கொள்ள முடியாத ட்ரைகால்சியம் பாஸ்பேட்டாக மாறுகின்றது. இவ்வாறு பல இரசாயன மாறுபாடு பெறுவதால் நல்ல பலன் தர பயிர்களின் தேவைக்குமேல் 2 அல்லது 3 மடங்கு மணிச்சத்தை உரமாக இடவேண்டிய அவசியம் ஏற்படுகின்றது.

மணிச்சத்து, இயற்கை உரங்களான தொழு உரம் தழை உரம், கம்போஸ்ட் இவைகளில் சிறிது அளவும் எலும்புத்தூளில் (Bone meal) 22 சத வீதமும் இருக்கின்றது. இரசாயன உரங்களான சூபர் பாஸ்பேட், அமோனியம் பாஸ்பேட், நைட்ரோ பாஸ்பேட் முதலானவைகளில் பெருமளவு இருக்கின்றது. தற்பொழுது உரடிப்போக்களில் சூப்பர் பாஸ்பேட்டும், அமோனியம் பாஸ்பேட்டும் எளிதில் கிடைக்கின்றது. சூபர் பாஸ்பேட்டில் 16 சத வீதம் மணிச்சத்து இருக்கிறது. இது நீரில் கரையும் தன்மையுள்ளது. செடிகளுக்கு எளிதில் கிடைக்கின்றது. அமோனியம் பாஸ்பேட்டில் 11 சத வீதம் தழைச்சத்தும் 45 சதவீதம் மணிச்சத்தும் இருக்கின்றது. இதுவும் செடிக்கு ஏற்ற நல்ல உரம்.

மணிச்சத்துள்ள உரத்தை பயிர்கள் நடுவதற்கு முன்பு கடைசி உழவில் இட்டு உழுதுவிடவேண்டும். இவ்வாறு செய்யாமல் பயிர்கள் வளரும் பொழுது இட்டால் பலன் தராது. நெல் நடவிற்கு முன்பு 150 இராத்தல் சூபர் பாஸ்பேட் அல்லது 65–70 இராத்தல் அமோனியம் பாஸ்பேட் கடைசி உழவில் இடவேண்டும். கரும்பிற்கு நடுவதற்கு முன் 350 இராத்தல் சூபர் பாஸ்பேட் இடவேண்டும். இவ்வாறு இடுவதால் வேர்கள் நன்ருக உண்டாகி கரும்பு நன்கு வளர்ச்சியடைகின்றது. மணிச் சத்து எளிதில் நெல்லுக்கு இடைக்க அதற்கு முந்திய தழை உரத்திற்கு ஆரம்பத்தில் சூபர் பாஸ்பேட் இட்டு அதில் வளர்ந்த தழையை இட்டால் நல்லபலன் தரும் 150 இராத்தல் சூபர் பாஸ்பேட் இடுவதால் 350 இராத்தல் நெல் அதிக விளைச்சல் கிடைக்கின்றது.

போதுமான அளவு பாஸ்பேட் உரங்கள் இடுவதால் விவசாயிகள் விளைச்சலை கணிசமான அளவில் பெருக்கி தங்களுடைய பொருளாதார நிலைமையையும் நாட்டின் உணவு நிலைமையையும் அபிவிருத்தி செய்வதற்கு ஏதுவாகும்.

வளம் தரும் ரசாயன உரமிட்டு மண்வளம் பெருக்கி வலிமை பெருக்குவோம்

ஆதாரப்பள்ளிகளுக்கான தோட்டம்

(சா. முத்துசாமி, ந. இராமு, விவசாயக் கல்லூரி, கோவை.)

பொதுவாக, தோட்டங்களில் செடிகளை அழகுக்காகவோ அல்லது காய்கறிகளைப் பெறவோ வளர்க்கிறோம். உதாரணமாக, வீட்டுச் சுற்றுப்புறத்தில் அமைக்கப்படும் தோட்டத்தில் காய்கறிச் செடிகள் முக்கியமாகப் பயிரிடப்படும், பெரிய நகரங்களில் மக்களுக்கு மன அமைதியும், சந்தோஷமும் அளிப்பதற்காக அமைக்கப்படும் பூங்காக்களில் மலர்ச் செடிகள் வளர்க்கப்படும். மற்றும், பள்ளித் தோட்டம் என்பதும் ஒருவகைத் தோட்டமாகும். இப் பள்ளித்தோட்டத்தின் முக்கிய நோக்கம், மாணவர்களுக்கு தோட்டக்கலையின் அடிப்படைத் தத்துவங்களை போதிப்பதற்கு உதவுவதேயாகும். பள்ளித்தோட்டம், குழந்தைகளின் அறிவு வளர்ச்சிக்கும், உடல் வளர்ச்சிக்கும் உதவவல்லது. சிறந்த பொழுது போக்கிற்கும். நூலறிவுடன் அனுபவ அறிவு பெறுவதற்கும், கற்பனை சக்தி வளர்வதற்கும் பள்ளித் தோட்டம் அவசியமானதாகும். பள்ளித்தோட்டம் பலவித பாடங்களையும் போதிப்பதற்கு உதவுகிறது. அளவு குறித்து தோட்டத்தை அமைத்தலும், முறைப்படி விதைகளை விதைத்தலும், செடிகளை நடுதலும் கணித சாஸ்திரத்தை நன்கு புரிந்து கொள்ள உதவுகின்றன. தோட்டத்தின் செடிகளை பராமறிப்பதும், மண்ணின் வளத்தை பாதுகாப்பதும், அவைகளை கூர்ந்து கவனிக்கும் பழக்கமும், வாழ்நாள் முழுவதும் மாணவர்களுக்கு பயன்தரக்கூடிய ஓர் அரிய திறமையை அளிக்கிறது. சத்துள்ள பழங்கள், காய்கறிகள் பயிரிடுவதன் மூலம் உணவு உற்பத்தியை ஓரளவு பெருக்குவதற்கும் இப்பள்ளித் தோட்டங்கள் துணை செய்கின்றன. ஆகவே ஆதாரப்பள்ளிகளில், தோட்டம் அமைப்பது மிகவும் முக்கியமானதும், பொருத்தமானதும் ஆகும்.

தோட்டம் அமைக்க குறிப்புகள்.—தோட்டம் அமைக்கப்படும் இடம் திறந்த வெளியாகவும், மண்வளம் கொண்டதாயும், தண்ணீர் வசதியுள்ளதாயும், பள்ளிக்கு அருகாமையிலும் இருக்க வேண்டும். தோட்டத்தின் அளவானது கிடைக்கக்கூடிய நிலத்தின் பரப்பளவு, பயிரிடப்படும் செடிகள், பள்ளிமாணவர்களது எண்ணிக்கை முதலியவற்றைப் பொருத்ததாகும். எல்லா மாணவர்களும் சேர்ந்து வேலை செய்வதற்குப் போதுமான இடம் தோட்டத்திற்கு அவசியமாகும்.

தோட்ட அமைப்புமுறை மிகவும் எளிதாய் இருத்தல் நலம். வளைவுகள், கோணல்கள் நிறைந்த தோட்டத்தைக் கவனித்து பராமரிப்பது கடினம். செவ்வக வடிவமான தோட்டம் சாலச் சிறந்ததாகும். தோட்டத்தை இரண்டாகப் பிரித்து, ஒன்றில் அழகு தரும் பூந்தோட்டமும், மற்றொன்றில் பயன்தரும் காய்கறித் தோட்டமும் அமைக்கலாம். தோட்டத்தைச் சுற்றிலும் வேலிபோட வேண்டும். தோட்டத்தின் எல்லா பாத்திகளையும் சுற்றிப்பார்க்க வசதியான நடைபாதைகள் அமைக்க வேண்டும். நடைபாதைகளின் அகலம் சுமார் 3 அடி இருக்கலாம். தோட்டத்தின் அளவைப் பொருத்து பாத்திகள் பிரிக்கவும். பாத்தியின் நீளம் 8-10 அடியும், அகலம் 4-6 அடியும் இருக்கலாம். தோட்டத்தினுள் நுழைய ஒரே ஒரு வழி அமைத்து அதன்மேல் மூங்கில் குச்சிகளால் வளைவுகள் செய்து, அழகான கொடிகளை அதில் படரவிடலாம். வேலியின் ஓரங்களில் கொய்யா, மாதுளை, எலுமிச்சை, அருநெல்லி, பலா போன்ற பழவகை மரங்களை நடலாம்.

ஆதாரப் பள்ளிகளில் சிறிய தோட்டக் கருவிகளை வைத்திருத்தல் அவசியம். இவைகள் தோட்ட வேலைக்கு உதவுவதுடன், இவைகளின் உபயோகம் பற்றி மாணவர்கள் தெரிந்து கொள்ளவும் உதவியாயிருக்கும்.

பூந்தோட்டத்தில், 3 அல்லது 4 மாத பூச்செடிகளை ஒவ்வொரு பருவத்திலும் சிறுபாத்திகளில் நடலாம். பாத்திகளை நேராகவும் முக்கோண வடிவமாகவும், சிலசமயம் அரைவட்ட வடிவமாகவும் அழகுற அமைக்கலாம். புல் தரைகளையும் அமைக்கலாம். பாத்திகளில் நடும்போது, நிறத்திற்கேற்றவாறு பூச்செடிகளைச் சேர்த்து நடுதல் அவசியம். சுவர், வேலி மற்றும் நடைபாதை ஓரங்களிலும் பூச்செடிகளை நட்டு அழகுற விளங்கச் செய்யலாம். அழகு தரும் பூச்செடிகள், கொடிகள் மட்டுமல்லாமல், பயன்தரும் பூச்செடிகளான ரோஜா, முல்லை, மல்லிகை, இருவாட்சி, கனகாம்பரம், சம்பங்கி, சாமந்தி, மருவு, மரிக்கொழுந்து போன்றவைகளையும் ஆங்காங்கே, பூந்தோட்டத்தினுள் நடலாம்.

பள்ளியினருகில் இடம் அதிகமாயிருந்தால், பூந்தோட்டத்தை பள்ளிக்கு முன்புறமும், காய்கறித் தோட்டத்தைப் பள்ளிக்குப் பின்புறமும் அமைக்கலாம்.

காய்கறித் தோட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட இடத்தை பல பாத்திகளாகப் பிரித்து, ஒவ்வொரு பாத்தியிலும், ஒவ்வொரு வகை காய்கறியை பயிர் செய்யலாம். பாத்தியின் அகலம் 15—20 அடி நீளமும், 10—15 அடி அகலமும் இருக்கலாம். காய்கறிச் செடிகளின் காலமும், அவைகளைப் பயிரிடும் பருவமும் கவனித்து பயிரிடுவதின் மூலம் தொடர்ந்தாற்போல் வருடம் முழுவதும் காய்கறிகளைப் பெறலாம். கீரை வகைகள், முள்ளங்கி, வெண்டை, கத்தரி போன்றவைகளை வருடம் பூராவும் பயிரிடலாம். அவற்றை இருமுறை பயிர் செய்து அவற்றை தொடர்ந்து பெறலாம். இவ்வாறு பயிர் செய்ய " மாற்றுப் பயிர் " முறையையும், (Rotation of crops) பல ரகமான காய்கறிகளைப்பெற, " ஊடு பயிர் " (Companion cropping) செய்யும் முறையையும் பின்பற்ற வேண்டும். நீண்டகால பயிருடன் குறுகிய கால பயிரையும் ஒரே காலத்தில் ஒரே இடத்தில் பயிரிடுவதே ஊடு பயிர் முறை. உதாரணமாக, முள்ளங்கியை, கத்தரி, மிளகாய், கொத்தவரை முதலியவைகளுடன் ஊடு

(29-ம் பக்கம் பார்க்கவும்.)

தென்னகம் எங்கும் பெரும்பாலான விவசாயிகள் பல்லாண்டுகளாக
ஒருமுகமாகப் பாராட்டி

"சூரியன்" மார்க் கலப்பு உரங்களை

வாங்குவதின் காரணம்:

* சர்க்காரின் அங்கீகாரம் பெற்றிருக்கிறது.
* பயிர் உணவுகளின் சத விகித சத்துப் பொருள்கள் உத்திரவாத மளிக்கப்பட்டிருக்கிறது.
* நிலங்களின் செழுமையை நீடித்துப் பாதுகாத்து அமோக விளைச்சலைத் தருவதில் முன்னணியில் நிற்கின்றது.

Regd. No.
156902

சில்களுடன் கூடிய "சூரியன்" மார்க் கலப்பு உரங்களை கவனித்து, இந்த உரமிடுங்காலத்திலும் சகல பயிர்களுக்கும் உபயோகித்து, மகசூலைப் பெருக்குங்கள். தங்களூர் அருகிலுள்ள எமது அத்தாட்சி பெற்ற விற்பனையாளர்களிடம் கண்ட்ரோல் விலைக்கே வாங்கிப் பயனடையுங்கள்.

விவரங்களுக்கு :—

கோயமுத்தூர் கெமிகல்ஸ் & பெர்டிலைசர்ஸ் லிட்.,
457, வைசியாள் வீதி * கோயம்முத்தூர்-1.

கேரளா கிளை :—54, புதுப்பரியாரம். இண்டஸ்ட்ரியல் எஸ்டேட் P. O., பாலக்காடு-2.

பயிராகப் பயிரிடலாம். கத்தரி, கொத்தவரை, தட்டைப் பயிர், வெண்டை, மிளகாய், தோல் தக்காளி, வெங்காயம் முதலியவைகள் பாத்திகளில் பயிரிட ஏற்றவையாகும். குளிர்காலத்தில், முட்டைகோஸ், காலி ப்ளவர், (பூக்கோஸ்) டானிப், நூல்க்கோல் பீட்ரூட் போன்ற காய்கறிகளையும் பயிரிடலாம். மரவகைகளான, முருங்கை, கறிப்பலா, கருவேப்பிலை, வாழை, பப்பாளி முதலியவைகளும் மற்றும் எலுமிச்சை, தவசிக்கீரை, குச்சி வள்ளி, சர்க்கரை வள்ளி போன்றவைகளையும் தோட்டத்தின் பின் பகுதியில் பயிரிடலாம்.

தோட்டத்தின் நடைபாதையோரங்களில், சிலோன் பசலை, பொன்னாங்கண்ணி, பொதினா, தண்டுக்கீரை, கொத்தமல்லி, வெந்தயக்கீரை போன்றவைகளைப் பயிரிடலாம். தோட்டத்தின் மத்தியிலிருக்கும் நடை பாதையில் இருபக்க ஓரங்களிலும் வரிசையாகத் தக்காளிச் செடிகளை நடலாம். நடைப்பாதைக்கு மேலே பந்தல் அமைத்து, அதில் அனுப்-இ-ஷாஹி திராட்சைக் கொடிகளை படர விடலாம். தோட்டத்தைச்சுற்றியுள்ள வேலிகளில், பசலை, பீர்க்கு, பாகல், நுரை பீர்க்கு, கோவைக்காய் முதலிய கொடிக் காய்கறிகளைப் படரவிடலாம். இதனால், தோட்டத்தின் உள் பாகத்தை வெளிப்பார்வையிலிருந்து மறைக்கவும் முடிகிறது. இரண்டு பாத்திகளைப் பிரிக்கும் வரப்புக்களிலும் வெங்காயம், முள்ளங்கி, பீட்ரூட், தண்டுக்கீரை போன்றவைகளைப் பயிரிடலாம்.

காய்கறித் தோட்டத்தின் மூலைகளில் 6′×5′×4′ அளவுள்ள குழிகளைப் போட்டு கம்போஸ்டு உரம் தயாரிக்கலாம். அறுவடை செய்தபின், உலர்ந்த காய்கறிச் செடிகளையும் மற்றும் காய்ந்த இலைகள், குப்பைகூளங்கள் முதலியவற்றை குழிகளில் போட்டு கம்போஸ்டு செய்யலாம். இதனால், பாத்திகள் தயார் செய்யும்போது, அவைகளுக்கு தேவையான உரத்தை இக் கம்போஸ்டு குழகளிலிருந்தே பெறலாம். இக் கம்போஸ்டு குழிகளுக்கு மேலே, பந்தல் அமைத்து, அதில் அவரை, பீர்க்கு, புடல், சௌசௌ முதலிய கொடிவகைக் காய்கறிகளைப் படரவிடலாம். மேற்கூறிய அமைப்பு முறையில் கோவை விவசாயக் கல்லூரியில் ஓர் மாதிரி வீட்டுக் காய்கறித் தோட்டம் அமைத்து பாதுகாக்கப்பட்டு வருகிறது. அதனை நேரில் பார்ப்பதன் மூலம், தோட்டம் அமைப்பது பற்றிய பல அம்சங்கள் நன்கு புலனாகும்.

பள்ளித்தோட்டம் பற்றி அதிகமான விபரம் வேண்டுவோர், கோவை விவசாய ஆராய்ச்சி நிலையத்தின்கண் உள்ள பழக்கலை நிபுணரிடம் கேட்டு தெரிந்து கொள்ளலாம்.

உணவும் நமக்கு போர் பலம்; ஓரளவும் அதை வீணாக்காதீர்

விவசாய செய்திக் கதிர்

மிளகாய்ப் பேன்.

இளம் மஞ்சள் நிறத்தையுடைய இந்த நுண்ணிய பூச்சிகள் மிளகாய்ச் செடியின் இலையின் அடிப்பாகத்தில் காணப்படுகின்றன. இப் பூச்சிகள் மிளகாய்ப் பயிரை எல்லாப் பருவத்திலும் தாக்குகின்றன.

இவை மிளகாய்ப் பயிரின் சாற்றை உறிஞ்சுவதால் இலைகள் சுருண்டு செடியின் வளர்ச்சி தடைப்படுகிறது. இதைத்தான் மிளகாயின் "சுருட்டை நோவு" என்கிறோம். செடியின் குருத்துப்பாகம் அதிகமாகத் தாக்கப்படுகிறது. நன்கு வளர்ச்சியடைந்த இலைகள் அவ்வளவாக பாதிக்கப்படுவதில்லை. தாக்குதல் தீவிரமாக இருந்தால் செடியில் அதிக அளவு பூக்கள் தோன்றுவதில்லை. அவ்வாறு தோன்றிய பூக்களும், தாக்கப்பட்டு காய்களும் சிறுத்துச் சுருங்கிவிடுகின்றன.

பி.எச்.சி. 10 சத தூளை எக்கருக்கு 15—20 ராத்தல் வீதம் தூவுவதின் மூலம் இவற்றைக் கட்டுப்படுத்தலாம். பி. எச். சி. 50 சத நனையும் தூள் ஒரு ராத்தலை 20 காலன் தண்ணீரில் கலந்து தெளிப்பதன் மூலம் இப் பூச்சிகளின் தாக்குதலைத் தவிர்க்கலாம். 0·015 சத வீதம் பாராதியான் மருந்தை அடிப்பதன் மூலமும் இப் பூச்சியை ஒழிக்கலாம். மருந்து தெளித்தபின்பும் இப் பூச்சிகள் காணப்பட்டால் மீண்டும் மருந்து தெளிக்கலாம். மருந்தின் விஷம் காய்களில் ஒட்டிக்கொண்டிருக்க வாய்ப்பு இருப்பதால் பயிரை தெளித்த இரண்டு மூன்று வாரங்களுக்குப் பிறகுதான் அறுவடை செய்யவேண்டும். இப்பூச்சிகள் இலைகளின் அடிப்பாகத்தில் அதிகமாகக் காணப்படுவதால் தெளிக்கப்படும் மருந்து இலைகளின் அடிப்பாகத்தில் நன்கு படியும்படி தெளிக்கவேண்டும்.

உரங்களை எவ்வாறு இடுவது ?

நம் விவசாயிகளிடையே செயற்கை உரங்களை உபயோகிக்கும் மனப்பான்மை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருகிறது. ஆனால் செயற்கை உரங்கள் தேவைக்குத் தக்க அளவில் கிடைப்பதில்லை. ஆகவே கிடைக்கும் செயற்கை உரங்களிலிருந்து நல்ல பலனைப்பெற உரங்களைத் தக்க முறையில் உகந்த சமயத்தில் இடவேண்டும்.

செயற்கை உரங்களைப் பயிர்களை விதைப்பதற்கு முன் வயலில் அடி உரமாகவும், மேலுரமாகவும் இடலாம். வளரும் பயிருக்குத் தேவையான சமயத்தில் பயிர்ச் சத்துக்களை அளிக்க, வயலில் பயிர் இருக்கும்போது உரமிடுவதைத்தான் 'மேலுரம்' இடுதல் என்கிறோம். சாதாரணமாக செயற்கை உரங்களை நிலத்தில் தூவுவது நம் விவசாயிகளிடையே வழக்கமாக இருந்து வருகிறது. ஆனால் இவ்வாறு உரங்களை நிலத்திலிடுவதைவிட மண்ணிற்குள் செடியின் வேர்களுக்கருகில் இடுவதுதான் (Placement) சிறந்த முறை.

ஆங்கிலத்தில் 'Placement' எனப்படும் இம்முறையைப் பற்றியும், உரங்களை என் இம்முறையில் இடவேண்டும் என்பதையும் கவனிப்போம். நிலத்திலிடப்படும் உரம் செடிகளின் படரும் வேர்மண்டலத்திற்கருகில் இல்லாவிட்டால் உரங்கள் மூலம் அளிக்கப்படும் பயிர்ச் சத்துக்களின் முழுப்பலனும் பயிர்களுக்குக் கிடைப்பதில்லை. உரத்தின் கரையக் கூடிய பகுதி நீரில் கரைந்து மண்ணிற்குள் மேலும் கீழும் பக்கவாட்டில் சுற்றும் பரவுகிறது. பாஸ்பேட் உரங்களுக்கு மண்ணிற்குள் பரவும் தன்மை மிகமிகக் குறைவு. ஆகவே பயிர்ச் செடிகளின் வேர்கள் மண்ணில் உரச்சத்து இருக்கும் இடத்தை நாடிச் செல்ல வேண்டியிருக்கிறது. ஆகவே இவ்வுரங்களை செடிகளின் வேர்கள் பரவியிருக்கும் மண்ணின் ஈரமான பகுதியில் பரவலாக இருக்கும்படி இடவேண்டும். இந்நோக்கத்துடன் உரங்களை இடுவதைத்தான் ஆங்கிலத்தில் 'Placement' என்கிறோம்.

இம் முறையில் உரங்களிடுவதனால் மூன்று நன்மைகள் உண்டு :

* பயிர்ச் சத்துக்கள் வேர் மண்டலத்தில், வேர்களால் கிரகிக்க தேவையான ஆழத்தில் கிடைக்கின்றன.

* நிலத்தின் மேற்பரப்பில் வளரும் களைகளால் உரச்சத்தை கிரகிக்க முடிவதில்லை.

* உரம் நிலத்திலுள்ள மண் முழுவதிலும் கலந்து வீணாகாமல் செடிகளின் வேர்கள் பரவும் இடத்தில் மட்டும் இடப்படுவதால், இடப்படும் உரம் செடிகளால் சிறந்த முறையில் உபயோகப்படுத்தப்படுகிறது.

உரங்கள் இடும் முறை அடி உரமாக நிலத்தை உழும்போது சால்களில் கையினால் உரத்தை இடலாம். ஒரு சாலில் இடப்படும் உரம் அடுத்த சால் எடுக்கும்போது மண்ணால் மூடப்படுகிறது. மேலுரமாக இடும்போது பயிர் வரிசைகளுக்கு 3 அல்லது 4 அங்குல தூரத்தில் 3"—4" ஆழத்தில் வரிசையாக இடலாம். நெற்பயிருக்கு உரத்தை களிமண் அல்லது சாணத்துடன் கலந்து உருண்டைகளாகச் செய்து நெற்செடியின் பக்கவாட்டில் மண்ணிற்குள் இடுவது மிகவும் சிறந்தது. இம் முறையில் இடுவது, நிலத்தில் தூவுவதைக் காட்டிலும் சிறந்தது என்று நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

எங்கும் கிடைக்கும் கால்ஷியம் அமோனியம் நைட்ரேட்டை உபயோகித்து, ஏராளமாய் உற்பத்தியைப் பெருக்கி எல்லையைக் காப்போம்

மாருத் சார்ஜ் பம்ப்பும் ஸ்ப்ரேயரும்

கோயம்புத்தூர் விவசாய பாதுகாப்பு நிலையத்தினால் அங்கீகரிக்கப்பட்டதும்
சென்னை விவசாய டைரக்டரால் ஏற்றுக்கொண்டதும்
(No. C. 1206691/61— 14—4—1962)

(சென்னை விவசாய டைரக்டர் கடிதம் No. C. 163213/62—7-7-1962 மூலம் காண்ட்ராக்ட் விகிதத்தில் உட்பட்டது)



குணங்கள் :—

1. சராசரி அழுத்தத்தில் வேலை செய்யத் தகுதியான ஆப்பரேட்டரில் ப்ரெஷர் ரெகுலேட்டர் அமைந்துள்ளன.
2. ஒழுகுவதைத் தடுக்க ஸ்ப்ரே லாண்ட்ஸில் கைவிரல்களால் கட்டுப்படுத்த ஸ்ப்ரேயர் அமைந்துள்ளன.
3. ஸ்ப்ரேயர் எஃகு தகட்டினால் செய்யப்பட்டவை.
4. ஸ்ப்ரேயரின் மேல் தொட்டியில் பாதுகாப்பு வால்வு அமைக்கப்பட்டுள்ளன. டெலிவரி குழாய் 1·5 மீட்டர் நீளம் உள்ளன.
5. 61 c.m. எக்ஸ்டென்ஷன் ஒரு பக்கம் கூட்ஸ் வாத்து கழுத்து போன்ற வளைந்த ராடும் ஸ்ப்ரே நாஸிலும் சேர்ந்தவை.



விலை விவரம் :—

(சென்னை அரசாங்கம் விதித்த காண்ட்ராக்ட் விலை)

18 லிட்டர் கொண்ட ஸ்டெயின்லஸ் ஸ்டீல் டாங்க்	290	ரூபாய்
14 லிட்டர் கொண்ட ஸ்டெயின்லஸ் ஸ்டீல் டாங்க்	280	ரூபாய்
மாருத் சார்ஜ் பம்பு — — —	280	ரூபாய்

செயலாளர்கள் :—

அமெரிக்கன் ஸ்பிரிங் அண்டு பிரஸ்ஸிங் வர்க்ஸ்
பிரைவேட் லிமிடெட்,
மலாட், பம்பாய்-64.

சென்னை, மைசூர் விநியோகஸ்தர்கள் :—

ரங்கஸ்வாமி அண்டு கம்பெனி,
93, ஸ்ரீநரசிங்க ராஜா ரோடு, பெங்களூர்.

தை, மாசி மாத விவசாயக் குறிப்புகள்

நெல்.

(நெல் ஆராய்ச்சி நிபுணர்.)

1. நவரை.—நவரைப் பயிருக்குத் தொடர்ந்து நாற்றிடுதல். நடவின் பொழுது 75 ராத்தல் சி. ஏ. என். உரமிடவும். 15 நாட்களுக்கொரு முறை ஜப்பானிய ஊடுழவுக் கருவியோட்டி களையெடுக்கவும். 2-வது முறை 75 ராத்தல் சி. ஏ. என். உரமிடவும்.

2. மானுவாரிப் பயிர் (செங்கல்பட்டு).—பிந்திய சம்பா, பிசான (திருநெல்வேலி) அறுவடை, தாளடிப் பயிரில் கலப்புக் கதிர்களைதல், அறுவடை. கலப்பின்றி விதையை சேகரித்து வையுங்கள். தரிசு நெல் வயல்களில் சம்பா பயிருக்கு இட, செஸ்பேனியா, டெய்ன்சா போன்ற பசுந்தாள் பயிர்களை விதையுங்கள். நீலகிரியில் குறுவை நடவு நடவின் பொழுது 75 ராத்தல் சி. ஏ. என். உரமிடவும்.

சிறுதானியம் பயறுவகைகள்.

(சிறுதானிய ஆராய்ச்சி நிபுணர்.)

சம்பா நெல் அறுவடைக்குப் பின் உளுந்து விதைக்கலாம். கம்பு, சாமை (நீலகிரி மாவட்டம்), பாசனச் சோள விதைப்புக்கு நிலங்களை நன்கு தயாரிக்கவும். ராகி நாற்று விதைப்புக்கு நல்ல பலன் அளிக்கும் கோ. 2, கோ. 7, போன்ற உயர்ந்த ரகங்களைத் தேர்ந்தெடுக்கவும்.

மானுவாரி சிறுதானிய பயறு வகைகளின் அறுவடை (வரகு, துவரை, மொச்சை அறுவடை).

பருத்தி.

(பருத்தி ஆராய்ச்சி நிபுணர்.)

(1) புரட்டாசி பட்ட கம்போடியாப் பருத்தி.—பஞ்சு எடுத்தல் (3, 4 முறைகள்), சுத்தமான பஞ்சைத் தனியாகப் பிரித்து இருப்பு வைத்தல் வேண்டும்.

(2) தரிசு நெல் வயல்களில் பயிரிடும் பருத்தி.—பி. 216 எஃப் என்ற பஞ்சாப் ரகப் பருத்தி நெல் வயல்களில் நடுவதற்கு மிக ஏற்றது.

சிறுதானிய ஆராய்ச்சி நிபுணர்.

நெல் அறுவடை முடிந்ததும், நெல் தாளடியிலேயே பருத்தியை விதைக்கவும். 15 ராத்தல் விதைக்கு ஒரு அவுன்ஸ் அக்ரசான் மருந்து கலந்து பின் விதைக்கவும். ஒரு ஏக்கருக்கு 12—16 ராத்தல் விதை தேவைப்படும். விதைத்து 12 நாட்களுக்குப் பின் பழுதுபட்ட செடிகளுக்கு மாற்றுச் செடிகள் நடவும். செடிக்குச் செடி ½ அடியும், வரிசைக்கு வரிசை 1½ '—2' யும் விட்டு, குழிக்கு 4, 5 விதைகள் வீதம் நடவேண்டும்.

3. கருங்கண்ணி முதன் முறை பஞ்சு எடுப்பு.

எண்ணெய் வித்துக்கள்.

(எண்ணெய் வித்து ஆராய்ச்சி நிபுணர்.)

நிலக்கடலை.

இறைவை.—தோட்டக்கால் நிலத் தயாரிப்பு—இரும்புக் கலப்பையால் உழுதல். ஏக்கருக்கு (1) 10 வண்டி தொழு எரு அல்லது கம்போஸ்ட்டும்;

(2) 168 ரா. சூப்பர் பாஸ்பேட், 84 ராத்தல் மியூரியேட் ஆ.ஃப் பொட்டாஷ், 84 ராதத்ல் சி. ஏ. என். அல்லது 280 ராத்தல் உரக்கலவை நெ. 3 இடவும்.

கடை உழவின் பொழுது இரசாயன உரமிட்டு ஜூனியர் ஹோ கருவி ஓட்டவும்.

நடவு.	வரிசைக்கு வரிசை.	விதைக்கு விதை விட வேண்டிய இடைவெளி.
(1)	(2)	(3)
குத்து ரகக் கடலை	12"	4"
கொடி ரகக் கடலை	18"	3"

விதைக் கலப்பை உபயோகித்தோ அல்லது நாட்டுக் கலப்பைச் சாலிலோ விதைக்கலாம்.

மானுவாரி.—அறுவடை செய்த கடலையை நன்கு காய வைத்து சாக்குகளில் கட்டவும்.

தென்னை.

பூச்சி (குறிப்பாக கருவண்டு), நோய் கண்டால் உடனடியாக அருகிலுள்ள விவசாய விஸ்தரிப்பு அலுவலரது ஆலோசனை கேட்டு தடுப்பு முறைகளைக் கையாண்டு தென்னை சேதமுறாது காக்கவும்.

பழம் காய்கறி வகைகள்.

(தோட்டக்கலை ஆராய்ச்சி நிபுணர், கோவை.)

மாசி மாதக் குறிப்பு.—திராக்ஷைக்குப் பந்தல் போடுதல்; போர்டோக் கலவை தெளித்தல் சாத்துக்குடிக்கு உரமிடுதல்; முள்ளங்கி, வெள்ளரி விதைப்பு மலைப்பாகங்களில் கோடை காலக் காய்கறிகள், உருளைக்கிழங்கு (நீர் கிழங்கு) விதைப்பு.

மா, பூ எடுக்கும் காலம். இது மாவில் தத்துப் பூச்சி காணப்பட்டால் 0.1 சத விகித டி. டி. டி. மருந்து தெளித்து (1 ராத்தலை 20 காலன் தண்ணீரில் கலக்கவும்) பூச்சியை அழிக்கவும்.

ஊறவைத்த விதைகள் உற்பத்தியைப் பெருக்கும்

[எம். மூஸா ஷெரீப், தாவர வியைல் பிரிவு விவசாய ஆராய்ச்சி நிலையம், கோவை.]

பொட்டாசியம் பாஸ்பேட், அமோனியம் பாஸ்பேட் போன்ற உரக்கரைசலில் நெல், சோளம், பருத்தி முதலிய விதைகளை ஊறவைத்து விதைப்பதன் மூலம் மகசூலை கணிசமான அளவுக்கு அதிகரிக்கலாம்.

செய்முறை

ஒவ்வொரு பயிருக்கும் ஒவ்வொரு உரம் தகுந்தது என கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

நெல்	பொட்டாசியம் பாஸ்பேட் (டிரை பேஸிக்).
சோளம்	பொட்டாசியம் பாஸ்பேட் (டை பேஸிக்).
பருத்தி	அம்மோனியம் பாஸ்பேட் (மானோ பேஸிக்).

ஒவ்வொரு விதைக்கும் தகுந்த உரத்தைத் தேர்ந்தெடுத்த பின அவ்வுரக் கரைசலையும் அதில் ஊறவைக்க வேண்டிய விதையின் எடையையும் நிர்ணயிக்க வண்டும். விதையின் எடையும் அவை ஊறவைக்கவேண்டிய அளவு கரைசலின் பரிமாணமும் 3 : 1 எனற விகிதத்தில் இருக்க வேண்டும். உதாரணமாக 300 கிராம் எடையுள்ள விதைகளுக்கு 100 கன சென்டி மீட்டர் (100 c.c.) கரைசல் தேவைப்படும்.

கரைசல் தயாரிக்கும் முறை

நெல்.—10 பவுண்டு விதை நெல்லை, 312 கிராம் டிரை பேஸிக் பொட்டாசியம் பாஸ்பேட், 1,512 கன சென்டி மீட்டர் தண்ணீர் கரைந்த கரைசலில் 16 மணி நேரம் ஊறவைக்க வேண்டும்.

சோளம்.—10 பவுண்டு விதையை, 206 கிராம் டை பேஸிக் பொட்டாசியம் பாஸ்பேட் 1,512 கன சென்டி மீட்டர் தண்ணீரில் கரைத்து உபயோகிக்கவேண்டும்.

பருத்தி.—10 பவுண்டு விதையை 174 கிராம் மானோ பேஸிக் அம்மோனியம் பாஸ்பேட் 1,512 கன சென்டி மீட்டர் தண்ணீர் கரைந்த கரைசலில் 16 மணி நேரம் ஊறவைக்கவேண்டும்.

கோவை விரிவினைப் பகுதியினர் இம் முறையை விவசாயிகள் வயலில் ஏகயாண்டு நெல் உற்பத்தியில் அதிக பலனைக் காட்டியுள்ளனர். அதைப் பற்றிய விவரம் கீழே தரப்பட்டுள்ளது.

இடம்.	ஒரு எக்கரில் விளைவு: உரமிடாதது. (பவுண்டு)	உரமிட்டது. (பவுண்டு)	சத வீத அதிக விளைச்சல்.
தொண்டாமுத்தூர்	2,450	2,870	17·1
தஞ்சாவூர் ..	1,870	2,090	11·8
செங்கல்பட்டு ..	3,080	3,800	23·4

இம் முறையினை நீங்களும் பின்பற்றி அதிக பலனை அடையுங்கள்.

WATER DIVINER

தண்ணீர் ஊற்றுகள் கண்டுபிடிப்பதில் 27வருஷ அனுபவமிக்க நிபுணர்

மேன்மை தங்கிய சென்னை கவர்னர், திருவாங்கூர் மஹாராஜா, தென் பிராந்திய மிலிடரி தளபதி, P.W.D., C.P.W.D., முற்போக்குள்ள தொழிலதிபர்கள், விவசாயிகள் மற்றும் பலராலும் ஆதரிக்கப்பட்டவர். கிணறுகள் வெட்ட ஊற்றுள்ளதும், பாறையற்றதுமான இடங்கள் கண்டுபிடித்துக் கொடுக்கப்படும். பழைய கிணறுகள் அடி வெட்டு வெட்டினால் அல்லது போரிங் போட்டால் பிரயோஜனப்படுமா, படாதா என்றும் ஆலோசனை கூறப்படும்.

தயவு செய்து விசாரிக்கவும் :

N. சாம்பசிவன்,
வாட்டர் டிவைனர்,
"ஸ்ரீரமண வில்லா",
41, கச்சேரி ரோட்,
மைலாப்பூர் : : மதருஸ்-4.

சென்னை மாநில காட்டு இலாகா பிரதம அதிகாரி (Chief Conservator of Forests) கொடுத்த நற்சாட்சிப் பத்திரம் :

வாட்டர் டிவைனர் ஸ்ரீ சாம்பசிவன், கிண்டியில் கவர்னர் பங்களாவுக்கு அருகாமையில் அமைந்துள்ள (பண்டிட் ஜவஹர்லால் நேரு அவர்களால் திறந்துவைக்கப்பட்ட) குழந்தைகள் விளையாடும் நந்தவனத்தில் (Children's Park) போரிங் போட இடம் குறிப்பிட்டுக் கொடுத்தார். அந்த இடத்தில் குழாய் கிணறு இறக்கியதில் அவர் தெரிவித்தபடியே திருப்தியடையும்படிக்கான அளவு தண்ணீர் கிடைத்து வருகின்றது. இந்த குழாய் கிணறு மூலம் இவ்விதம் தண்ணீர் கிடைத்திருக்காவிட்டால் குழந்தைகளது நந்தவனத்தை அபிவிருத்தி செய்திருக்கமுடியாது மதிப்பிட முடியாத இவ்வரிய சேவைக்கு ஸ்ரீ சாம்பசிவனுக்கு, சென்னை காட்டு இலாகா, நன்றி தெரிவிக்க மிகவும் கடமைப்பட்டிருக்கிறது.

(ஒப்பம்) C. A. R. பத்திரன், I.F.S.,
Chief Conservator of Forests, Madras, 31-8-61

குறிப்பு :—மேற்படி நந்தவனத்தில் கவர்மெண்டாரால் அநேகம் குழாய் கிணறுகள் 500 அடி வரை இறக்கியும் தண்ணீர் கிடைக்கவில்லை. நான் குறிப்பிட்ட இடத்தில் 90 அடியில் நல்ல ஊற்றாக கிடைத்திருக்கிறது.

கேள்வி அரங்கம்

1. **கேள்வி**— முக்கியமான இரசாயன களைக்கொல்லிகள் யாவை ? அவை கிடைக்குமிடம், அவை கொல்லக்கூடிய களைகள் முதலிய விவரங்களைத் தெரிவிக்கவும்.

பதில்—இவை வெவ்வேறு வியாபாரப் பெயர்களில் கீழ்க் கண்ட கம்பெனிகளில் கிடைக்கும் :—

	களைக் கொல்லிகள்.	கிடைக்குமிடம்.
(அ)	(1) 2, 4—டி.	(1) பாரத் பல்வரைசர்ஸ் சென்னை–19.
	(2) 2, 4, 5—டி.	(2) பர்மா ஷெல்.
	(3) பி.சி.பி.	(3) டாடா. A பைசன்
	(4) எம்.சி.பி.ஏ.	(4) மே அண்ட் பேக்கர், சென்னை–2.

(இவற்றின் விலை கிலோவிற்கு ரூ. 6-லிருந்து 8 வரை யாகிறது.)

(ஆ)	(5) டௌபான்.	(1) ஐ.சி.ஐ.
		(2) பர்மா ஷெல்.
		(3) பூட்ஸ்.
		(4) டாடா பைசன்.

(டௌபான், டாலபான், டீஃபாபான் என்ற பெயர் களில் கிடைக்கிறது.)

முதல் நான்கு களைக் கொல்லிகளை அகல இலைகளுடைய களைகளை (சிறு இலைத் தாவரம்) கொல்ல உபயோகிக்க வும். ஏக்கருக்கு ஒன்று அல்லது இரண்டு ராத்தல் வரை தேவைப்படும். பருத்தி, பயறு வகைகள், இதர இரு பருப்பு பயிர்கள் (Dicotyledonous crops) இக்களைக்கொல்லி களால் எளிதில் பாதிக்கப்படுகின்றன. ஏக்கருக்கு மூன்று ராத்தல்களுக்குமேல் மருந்து உபயோகிக்கப்பட்டால் தானிய வகைகள் பாதிக்கப்படுகின்றன.

டௌபான் மருந்துகள், கோரை, அருகம்புல் போன்ற புல் வகைகளை அழிக்க உபயோகப்படுகிறது. பருத்தி, சிறுதானியவகைகள் எளிதில் பாதிக்கப்படுகின்றன.

குறிப்புகள்—

1. சரியான அளவு மருந்து உபயோகிக்க வேண்டும்.
2. காலையிலோ, மாலையிலோ காற்று, மப்பு, மந்தார மில்லாத நாட்களில் மருந்தடிக்கவேண்டும்.
3. மருந்தினால் எளிதில் பாதிக்கப்படும் பயிர்களின் மேல் மருந்துபடாது கவனிக்கவும்.
4. பூச்சி மருந்தடிக்கும் ஸ்ப்ரேயரை உபயோகிக்காது வேறு ஸ்ப்ரேயரை களைக்கொல்லி மருந்தடிக்க உபயோகித்தல் அவசியம். ஏனெனில் இவை பயிர்களை எளிதில் பாதிக்கும்.
5. ஸ்ப்ரேயர்களை உபயோகித்தபின் நன்றாகக் கழுவி சுத்தம் செய்தல் வேண்டும்.

2. **கேள்வி**—கம்பு, ராகி, கோதுமை இவைகளில் எது சத்து மிகுந்த உணவு என்பதையும் அவைகளின் (Nutritive value) உணவுச் சத்து மதிப்பையும் தெரியப்படுத்தவும்.

பதில்— **உணவு சத்து மதிப்பு.**

	ஈரம்%	புரதம்%	கொழுப்பு%	தாது உப்புகள்%	நார்ப் பொருள்%	மாவுச்சத்து%	கால்சியம்%	பாஸ்பரம்%	இரும்பு% (மில்லிகிராம்)	வைட்டமின் A I. u/ 100 கிராம்.	வைட்டமின் B I u/100 கிராம்
கம்பு	12.4	11.6	5	2.7	1.2	67.1	0.05	0.35	8.8	220	330
ராகி ..	13.1	7.1	1.3	2.2	..	76.3	0.33	0.27	5.4	70	420
கோதுமை ..	12.8	11.8	1.5	1.5	1.2	71.2	0.05	0.32	5.3	108	540

I.u.= International unit.

இது சம்பந்தமாக மேலும் தெரிய விரும்பினால் மத்திய உணவுத் துறை ஆராய்ச்சிக் கழகம் (Central Food Technological Research Institute), மைசூர் என்ற விலாசத்துக்கு எழுதிக் கேட்கவும்.

பயிர் பூச்சிகளுக்கு...



போரில் தோல்வியே...

பாரீஸ் பூச்சி நாசினிக் கலவைகளின் மகோன்னத பூச்சிநாச சக்தியினின்றும் பூச்சிகள் நழுவித் தப்புவது அசாத்யம். ஏனெனில் பாரீஸ் பூச்சி நாசினிகள் எல்லாவகைப் பயிர் பூச்சிகளையும் அடியோடு அழிப்பவையாகும்.

Parry's

பென்ஸிக்ளோர்
டி. டி. டி
மலாதியான்
எண்ட்ரின்
ஆல்டிரின்

பூச்சிநாசினி
கலவைகள்



மேலும் இதர, குறிப்பான விவரங்களுக்கு எழுதி விசாரிக்கவும் :

ஈ. ஐ. டி. பாரி லிமிடெட்.

(இங்கிலாந்தில் இணைக்கப்பெற்றது. அங்கத்தினர்களின் பொறுப்பு வரையறுக்கப்பட்டது)

பெர்டிலைசர் இலாகா (I & F), டேர் ஹவுஸ், சென்னை-1

PZ-1304 TM

"வழிகாட்டி"

(நாடகம்)

(கே. எஸ். ஆலம்கிர், விரிவினைப் பகுதி, கோவை-3.)

காட்சி 11

இடம்.—வீதி.

பாத்திரங்கள்.—சுந்தரம், மாரிமுத்து, மேஸ்திரி.

மாரி.—ஐயா எங்கோ அவசரமா போருப்பிலே இருக்கு.

டிமான்.—வாங்க மாரிமுத்து, வாங்க..உங்களைப் பத்தி இப்பத்தான் நினைச்சேன். உங்களுக்கு பயிர் விளைச்ச போட்டியிலே பரிசு கிடைச்சிருக்கு. பரிசு கொடுக்க நாளைக்கு வருகிறார்.

மாரி.—அப்படீங்களா! எல்லாம் உங்க தயவு....

டிமான்.—அதுக்காக ஜமீன்தாரைப் பார்த்து தலைமை வகிக்க அவரையே கூப்பிடலாம்னு போறேன்....

மாரி.—ஜமீன்தாரை கூப்பிட போவாதீங்க....உங்களைப் பார்த்தாலே கோபம் பொத்துகிட்டு வருமே.. வேண்டாம் சாரு....

டிமான்.—மாரிமுத்து, கோபம் இடத்திலேதான் குணமும் இருக்கும். போகப்போக பாருங்களேன் என்ன நடக்குதுன்னு.

மாரி.—எதுக்கும் கொஞ்சம் ஜாக்கிரதையா இருக்கணும்.

டிமான்.—நீங்களும் வாங்களேன்.

மாரி.—ஐய்யய்யோ..எனக்கு மேலே வேலை இருக்கு.. நான் வர்றேன்....

டிமான்.—ஹி. ஹி..சரி போயிட்டு வாங்க....

மேஸ்திரி.—ஹி..ஹி....சார்....எனக்கும் கொஞ்சம் வீட்டிலே வேலை..போய் வரலாம்னு....

டிமான்.—சரி....சரி..போ..இவங்கள்ளாம் பிச்சுக்கிட்டு போறதைப் பார்த்தா எனக்குகொஞ்சம் பயமாயிருக்கு. இருந்தா என்ன?..ராஜு இருக்கும் போது பயமென்ன.

(திரை)

காட்சி—12

இடம்: ஜமீன்தார் வீடு.

பாத்திரங்கள்; ஜமீன்தார், ராஜு, கணக்கப்பிள்ளை.

ராஜு.—(எங்கோ புறப்பட்டுக்கொண்டிருக்கிறான்) கணக்கு! யோவ் கணக்கு! சே சே சே இந்த மனுஷனோடை பெரிய தொந்தரவாப் போச்சு. கூப்பிட்டா வர்ரதில்லே சொல்ற வேலையைச் செய்யுறதில்லே....சேச்சே.... (பலமாக) யோவ் கணக்கு.

கணக்கு.—(உள்ளே வந்து) இதோ வந்திட்டேனுங்க.... என்ன வேணும்....

ராஜு.—எங்கேய்யா போய் தொலைஞ்சுட்டே....அது சரி நான் கொஞ்சம் வெளியே போயிட்டு வர்ரேன். அப்பா வந்தா சொல்லிடு.

கணக்கு.—எஜமான்....நம்ம வீட்டுக்கு டெமான்ஸ்டிரேட்டரைய்யா வர்றாராம். மாரிமுத்து சொன்னான்.. பெரிய எஜமானுக்கு அவரைக் கண்டா பிடிக்காதுன்னு உங்களுக்குத்தான் தெரியுமே. அதனாலே எதுக்கும் நீங்க வீட்டிலே இருக்கிறது நல்லதுன்னு எனக்குப் படுதுங்க..

ராஜு.—அடடே டெமான்ஸ்டிரேட்டர் நம்ம வீட்டுக்கு வர்றாரா! ஆச்சரியமா இருக்கே..அவரெப் பார்க்கத் தான் நான் புறப்பட்டுகிட்டு இருக்கேன்..

கணக்கு.—(ஆவலுடன்) எஜமான் அவரெ உங்களுக்கு முன்னாலேயே தெரியுங்களா.

ராஜு.—இல்லே, ஒரு தடவைப் பார்த்திருக்கேன்..

கணக்கு.—அவரு ரெம்ப நல்லவருல்லே எஜமான்..

ராஜு.—அப்படீன்னு யார் சொன்னது..

கணக்கு.—(பயந்து) ஐயையோ..தெரியாமெ சொல்லிட்டேனுங்க....

ராஜு.—நல்லவர் மட்டுமில்லே, விஷயத்துலே வல்லவர்கூட.

கணக்கு.—(பெருமூச்சுவிட்டு) நல்ல வேளைக்கி... நான் என்னமோ நினைச்சு பயந்துட்டேன்...

ராஜு.—சரிசரி போய் காப்பியெல்லாம் தயார் பண்ணு...

கணக்கு.—பெரிய எஜமான் பார்த்தா...

ராஜு.—நான் இருக்கேன்... பார்த்துக்கிறேன்...நீபோ..

கணக்கு.—அப்போ சரிங்க...(போகிறான்).

(ராஜு புத்தகத்தைக் கையில் எடுத்து உட்கார்ந்து படிக்கிறான்).

ஜமீன்தார்.—(உள்ளே நுழைந்து) என்னடா மைனர் என்ன பண்ணிகிட்டிருக்கே..

ராஜு.—(எழுந்து) ஒண்ணுமில்லேப்பா..சும்மா புத்தகம் படிச்சிகிட்டிருக்கேன்...

ஜமீன்தார்.—படி..படி..

கணக்கு.—(உள்ளே நுழைந்து) எஜமான் டெமான்ஸ்டிரேட்டரு வர்றாருங்க..

ஜமீன்தார்.—(பதறிக்கொண்டே) என்னடா உளர்ரே..

கணக்கு.—உளரலேங்க..நெஜமாகத்தான் வர்ராரு. உங்களைப் பார்க்கணுமாம்..

ஜமீன்தார்.—(ஆச்சரியத்துடன்) என்ன என்னைப் பார்க்கணுமா..என்னடா வம்பாப் போச்சு..(யோசித்து) சரி சரி வரச்சொல்லு..

ராஜு.—'எம்'பா இப்படி பயப்படுறீங்க....

ஜமீன்தார்.—ஹி..ஹி..நானாவது பயப்படறதாவது..ராஜு எதுக்கும் நீ பக்கத்திலேயே இரு..

(டெமான்ஸ்டிரேட்டர் சுந்தர் உள்ளே நுழைகிறார்).

சுந்தர்.—வணக்கம் சார்..

ஜமீன்தார்.—வணக்கம்..வணக்கம்..

ராஜு.—சார், உட்காருங்க சார், காப்பி கொண்டு வர்ரேன்.. (போகிறான்.)

(ஜமீந்தார் ராஜூவை முறைத்துப் பார்க்கிறான்.)

ஜமீன்தார்.—எங்கே வந்தீங்க..என்ன வேணும்?

சுந்தர்.—நம்ம ஊர் விவசாயி மாரிமுத்து, பயிர் விளைச்சல் போட்டியிலே முதல் பரிசு வாங்கியிருக்காரு..அந்த பரிசளிப்பு விழாவுக்கு நாளைக்கு கலெக்டர் நம்ம ஊருக்கு வர்ராரு..

ஜமீன்தார்.—வரட்டுமே..அதனாலே எனக்கென்ன..

சுந்தர்.—அந்த விழாவுக்கு நீங்கதான் தலைமை வகிக்கணும்..

ஜமீன்தார்.—(கோபத்தோடு) நானு..? அதெல்லாம் என்னாலே முடியாது, வேறே யாரையாவது பாருங்க. எனக்கு எகப்பட்ட வேலையிருக்கு.

சுந்தர்.—நீங்கள் அப்படிச் சொல்லக்கூடாது..

ஜமீன்தார்.—யோவ்..வரமுடியாதுன்னு ஒரு வார்த்தையிலே போங்கய்யா..சும்மா தொந்தரவு செய்யாதீங்க.

சுந்தர்.—என்ன கொஞ்சங்கூட மரியாதை யில்லாமல்..

ஜமீன்தார்.—ஆ..மகா மனுஷனுங்க, மரியாதை வேறெ மரியாதை..

சுந்தர்.—(கோபத்தோடு) நான் வர்ரேனுங்க..

ராஜு.—(காப்பியுடன் வந்து) சார்..சார்..காப்பி சாப்பிட்டு விட்டு போங்க சார்..

ஜமீன்தார்.—(கோபத்தோடு) டேய் ராஜு.

ராஜூ.—என்னப்பா இது நீங்க நடந்துகிர்றது. கொஞ்சங்கூட நல்லா இல்லே..

ஜமீன்தார்.—டேய் எனக்கே புத்தி சொல்ல ஆரம்பிச்சுட்டியா..உன்னைச் சொல்லி குத்தமில்லேடா.. உன்னைப் பெத்தாளே அவளைச் சொல்லனும்... (வெளியே விவசாயிகள் சத்தம் கேட்கிறது) யோவ் கணக்கு வெளியே என்னய்யா சத்தம்..போய் பார்த்துட்டு வாய்யா..

கணக்கு.—எஜமான் நம்ம பண்ணையாளுங்களெல்லாம் படையெடுத்தாப்பலே வந்திருக்காங்.. எஜமான்.. உள்ளேயே வந்துட்டாங்க..எஜமான்..

(விவசாயிகள் உள்ளே நுழைந்து வீரத்துடன் நிற்கிருர்கள்.)

ஜமீன்தார்.—என்னடா..எங்கே வந்தீங்க..

விவசாயி கந்தசாமி } எஜமான் நம்ம மாரிமுத்து இல்லீங்க..மாரிமுத்து, அவன் டெமான்ஸ்மாஸ்டரைய்யா சொன்னபடி விவசாயம் செஞ்சு நல்ல மகசூல் எடுத்துட்டானுங்க. நாளைக்கி பரிசு வேறே வாங்கப்போருனுங்களாம். அதனாலே நாங்க இனிமே டெமான்ஸ் மாஸ்டர் சொல்ருப்புலேதான் வெவசாயம்..இல்லேன்னு....

ஜமீன்தார்.—இல்லேன்னு....

விவசாயி வெங்கிடசாமி } பட்டினி கடந்து செத்தாலும் சாவோமே தவிர நீங்க சொல்றபடி வெவசாயம் செய்ய மாட்டோம்.

ஜமீன்தார்.—(கோபத்தோடு) டேய் என்னடா பூச்சாண்டியா காட்டுறீங்க. நான் இல்லேன்னு நீங்க எங்கேடா வாழ்றது. பட்டினி கடந்து சாக வேண்டியதாண்டா, சோத்துக்கு லாட்டரி அடிக்கனும் தெரியுமா?....

கந்தசாமி.—செத்தாலும் பரவாயில்லே.. வாங்கடா போகலாம்.

(போகிருர்கள்)

ஜமீன்தார்.—போங்கடா நாளைக்கி நீங்களே வந்து எங் காலைப் பிடிக்கிறதை நான் பார்க்கத்தான் போறேன்.. (உலவிக்கொண்டு) சேச்சே..எல்லாம் அந்தப் பய தூண்டிவிட்டிருப்பான்..உம்..இப்போ என்ன செய்யுறது.

கணக்கு.—(மெதுவாக பக்கத்தில் வந்து) எஜமான்..இந்த நேரத்திலே கலெக்டர் நம்ம ஊருக்கு வர்ராராம்.. நீங்க கூட்டத்துக்குப் போகலேன்னு விஷயம் இன்னும் எக்கச் சக்கமாய் போயிடும். நாம் எதுக்கு கலெக்டர் பொல்லாப்பைத் தேடிக்கிறனும்..எதுக்கும் நீங்க கூட்டத்துக்குப் போயிட்டு வர்ரது நல்லதுங்க எஜமான்.

(ஜமீன்தார் யோசிக்கிருர்)

ராஜு.—ஆமப்பா....கலெக்டர் பொல்லாப்பை எதுக்கு தேடிக்கிறனும், போயிட்டு வாங்கப்பா....

ஜமீன்தார்.—ஊம்..சரி.. ராஜு நீயே டெமான்ஸ்டிரேட்டர்கிட்டே போய் நான் தலைமை வகிக்க ஒப்புக் கொண்டதாகச் சொல்லிட்டு வா..போய் பார்ப்போம்.

காட்சி—13

இடம்.—ஊர் பொதுச் சத்திரம்.

பாத்திரங்கள்.—கலெக்டர், பி.டி.ஓ., ஏ.இ.ஓ., மிராஸ்தார், மேஸ்திரி, மற்றும் பலர்.

பி.டி.ஓ..—(எழுந்து நின்று) மதிப்பிற்குரிய மாவட்ட கலெக்டர் அவர்களே! விவசாயப் பெருமக்களே, நண்பர்களே, இன்றைய பரிசளிப்பு விழாவிற்கு நமது ஊர் ஜமீன்தார் திரு. வேதநாயகம் அவர்களை தலைமை தாங்க அழைக்கின்றேம்.

சுந்தர்.—இப்போது நமது மாநிலத்திலேயே எக்கர் ஒன்றுக்கு அதிகமான நெல்லையும், பருத்தியையும் விளைவித்த திரு. மாரிமுத்து அவர்களுக்கு நமது கலெக்டர் அவர்கள் இப்போது பரிசளித்துப், பேசுவார்கள்.

கலெக்டர்.—(எழுந்து மாரிமுத்துவுக்கு இரண்டு தங்கப் பதக்கங்களை சட்டையில் குத்திவிட்டு) தலைவர் அவர்களே, வட்டார வளர்ச்சி அதிகாரி அவர்களே, விவசாயப் பெருமக்களே! இந்தப் பரிசளிப்பு விழாவில் என்னைக் கலந்து கொள்ள அழைத்தமைக்கு நான் பெருமைப்படுகிறேன். நமது ஜமீன்தார் அவர்கள் வர இயலாத அவசர காரியமிருந்தும்,

அதையெல்லாம் விட்டுவிட்டு இங்கு வந்ததிலிருந்து, அவருக்கு கிராம முன்னேற்றத்தில் எவ்வளவு அக்கரையும் ஆர்வமும் இருக்கிறது என்பதை நான் தெரிந்துகொள்ள முடிந்தது. அவரைப் போன்ற பெரிய மனிதர்களின் ஊக்கமும் ஆதரவும் விவசாயிகளுக்கு இருக்குமேயானுல், இந்தக் குளததுப்பட்டியில் உள்ள எல்லா விவசாயிகளும் நமது தமிழ் நாட்டிலேயே முதன்மை பெற்று விளங்குவார்கள என்று நினைக்கிறேன். குளத்துப்பட்டி விவசாயி இன்று பரிசு பெறுவது நமது மாவட்டத்திலேயே முதல் தடவை என்று நினைக்கிறேன். குளத்துப்பட்டியின் முன்னேற்றத்தில் அக்கரை காட்டிய விவசாய அதிகாரி திரு. சுந்தரம் அவர்களை நான் பாராட்டாமல் இருக்கமுடியாது. அவருடைய முயற்சியின் மகத்தான வெற்றிதான். இந்த ஊர் பி.டி.ஓ. அவர்களின் ஒத்துழைப்பையும் பாராட்டி உங்களிடமிருந்து விடைபெறுகிறேன்.

சுந்தர்.—இப்போது நமது ஊருக்குப் பெரியவரான வீராச்சாமி பெரியய்யா அவர்கள் பேசுவார்கள்.

வீராச்சாமி.—(தடுமாறிக் கொண்டு எழுந்து நின்று) ஜமீன்தாரய்யா, தலைவர் அவர்களே....கலெக்டர் துரையவர்களே....உம், உம் ஆபீசர்களே..... விவசாயிகளே ! ஏதோ வயசுலே மூத்தவன்னு என்னைப் பேசச் சொல்லிவிட்டாங்க. எனக்கு இந்த மாதிரி கூட்டங்கள்ளே இது மாதிரி (மைக்கைக் காணபிதத) கரண்டுக்கு முன்னுலே நின்னு பேசறதுன்னு ரொம்ப நடுக்கமுங்க. அதனுலே ஒரு ரெண்டு வார்த்தை பேசீட்டு உக்காந்துக்கிறேன். அந்தக் காலத்துலே இருந்து நாங்களெல்லாம் விவசாயம் செய்யரும். எத்தனை பேர் உண்மைகளைத தெரிஞ்சுக்கிராமேயே வெவசாயம் பண்ணிட்டு வந்திருக்கோம். இட்போ வெவரமாப் படிச்ச நம்ம டெமான்ஸ்மாஸ்டரு மாதிரி ஆளுங்க சொல்றதுலே எவ்வளவோ நன்மை இருக்கு. அதெத் தெரிஞ்சு எல்லோரும் வெவசாயம் பண்ணணும்ன்னு சொல்றேன். மதத விவரமெல்லாம் மாரிமுத்து சொல்லுவான். நம்ம ஊருக்குள்ளேயே படிச்சவன்....... வெவரம் தெரிஞ்சவன். அதனுலே நான் இதோட முடிச்சுக்கிறேன்.

(உட்காருகிருர்)

சுந்தரம்.—இப்போது பரிசு பெற்ற மாரிமுத்து பேசுவார்.

மாரிமுத்து.—எல்லோருக்கும் நமஸ்காரமுங்க...... நான் ஏதோ படிச்சவன். விவரம் தெரிஞ்சவன்னு எங்க பெரியய்யா சொன்னுரு. ஒரு வகையிலே இந்த ஊருக்குள்ளே அஞ்சாங்கிளாஸ் வரைக்கும் படிச்சிருக்கேன். அதுவும் பருச்சே எழுதலே. நாலே முடிச்சு காலே வெச்சேங்க. அஞ்சுலே..... எங்க அப்பெத்தா மண்டையை....அதோட படிப்புப் போச்சு. எம்பாட்டுக்குப் பேசிக்கிட்டே இருக்கேன். விசயத்துக்கு வருவோம். என்னடா சத்தம் போட்டுப் பேசுறனேண்ணு நீங்க நெனைச்சுக்காதிங்க. (மைக்கைக் காட்டி) இந்த டப்பி வழிகாட்டி தப்பி வந்த வார்த்தை தானுங்க. அப்படிக் கேக்குது, அது கடக்கட்டும். நம்ம டெமான்ஸ் மாஸ்டர் அய்யா எனக்கு நல்ல பொறுக்கு விதையாக் கொடுத்தாரு. வெதச்சேன். வரிசையிலே பயிர் செய்யச் சொன்னுரு செஞ்சேன். நல்ல பூச்சி மருந்தெல்லாம் கொடுத்து அடிக்கச் சொன்னுரு, அடிச்சேன். அதனுலே ஆண்டவன் புண்ணியத்துலே இந்தத் தடவை நல்ல மகசூல் கிடைச்சுது. என்னப்போல மத்த வெவசாயிகளும் டெமான்ஸ்மாஸ்டர் அய்யா சொல்றபடி வெவசாயம் செஞ்சு நல்ல வெள்ளாமையப் பெறணும் நல்லா வாழனும்னு சொல்லிக்கிட்டு....எம்பேச்செ முடிச்சுக்கிறேன்.

சுந்தர்.—இப்போது நமது ஜமீன்தார் அவர்கள் பேசுவார்கள்.

ஜமீன்தார்.—(எழுந்து தடுமாறிக் கொண்டே) கலெக்டர் அவர்களே....அதிகாரிகளே எனக்கு நான்..... இவ்வளவு தூரம் பாராட்டு வாங்குவேன்னு எதிர் பார்க்கலே. ஆனு இந்தப் பாராட்டுகளெல்லாம் எனக்கு உங்களுக்குத் தெரியும். உண்மையில் கிராம முன்னேற்றத்துக்குத் தடையாய் இருந்தது நான் தான். டிமான்ஸ்டிரேட்டருக்கு பல இடைஞ்சல்களையெல்லாம் செஞ்சேன். அதையெல்லாம் மறந்து திருவள்ளுவர் சொன்னுப்புலே "இன்னு செய்தார்க்கு" என்னவோ சொன்னுப்புலே நிருபிச்சுக் காட்டிட்டாரு, நம்ம டெமான்ஸ்ட்ரேட்டர். அதுக்காக நான் ரொம்பவும் வெட்கப்படறேன். அவருக்கிட்டே மன்னிப்பைக் கேக்கரேன். (கைத்தட்டல்) இன்னிக்கிருந்து நான் ஒரு புது மனுஷன். ஜமீன்தார் வேதநாயகம் மறைந்து இப்போ சாதாரண விவசாயி வேதநாயகமா நிக்கிறேன். இனிமே எல்லா விவசாயிகளும் டிமான்ஸ்டிரேட்டர் சொல்றபடி தான் விவசாயம் செய்யணும். நல்ல பொருக்கு விதைகளை உண்டாக்கி விவசாயிகளுக்கு தர்மத்துக்காக கொடுக்கறதுக்கு 50 ஏக்கர் நஞ்சையும் சர்க்காருக்கு இன்னிக்கே நன்கொடையா எழுதிக் கொடுத்துடறேன். (கைத் தட்டல்). இன்னிக்கே புதுமாதிரியான விவசாயிக் கருவிகளெல்லாம் உங்களுக்கு சப்ளை செய்ய ஏற்பாடு பண்ணுறேன். விவசாயிகள் சங்கம் வெச்சு நடக்கறதுக்கு என்னுடைய பழைய பங்களாவையும் கொடுத்துடறேன். (கைத்தட்டல்) எம் மகனையும் வெசாயக் காலேஜுலே படிக்கவச்சு அவன் படிச்சு வந்து நம்ம கிராம முன்னேற்றத்துலே ஈடுபடச் செய்யறேன்.

பி.டி.ஒ.—இந்தக் கூட்டத்திற்கு வந்த கலெக்டர், ஜமீன்தார் மற்றும் எல்லோருக்கும் எங்கள் அலுவலகத்தின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(கூட்டம் கலைகிறது)

—திரை—

முற்றும்

1962-ம் ஆண்டு அக்டோபர் மாதத்திய காலநிலை அறிக்கை

(சி. பாலசுப்ரமணியன், ம. வி. ஐயராமன், சீ. ரங்கநாதன், விவசாய காலநிலை ஆராய்ச்சிப் பிரிவு, கோவை.)

இம்மாத முதல் தினத்தில் தமிழ் நாட்டில் சிற்சில இடங்களில் மழை பெய்தது. தொடர்ந்து ஐநது நாட்கள் ஆங்காங்கு மழை இருந்தது. 1962-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 7-ந் தேதியன்று சிற்சில இடங்களில் மழை பெய்தது. 1962-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 8-ந் தேதி தமிழ் நாட்டில் ஆங்காங்கு மழை பெய்தது. 1962-ம் ஆண்டு அகடோபர் மாதம் 9 ந் தேதி தமிழ் நாடெங்கும் பரவலாக மழை பெய்தது. பினனர் 1962-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 12-ந் தேதி முதல் 16-ந் தேதிவரை தமிழ் நாட்டின் சிற்சில இடஙகளில மழை பரவலாகப் பெய்தது. அடுத்த ஒரு வாரத்திற்கு மழை பரவலாகப் பெய்தது. ஆனல் 1962-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 21-ந் தேதி ஆஙகாங்கு மழை பெய்தது. பின்னர் 1962-ம் ஆணடு அக்டோபர் மாதம் 30-ந் தேதி வரை தமிழ் நாடடின் சிற்சில இடங்களில் மழை பெய்தது. 1962-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 31-ந் தேதி தமிழ் நாடெங்கும் வறட்சி நிலை நிலவியது. வெப்ப நிலை இம்மாதத்தில் எல்லா நாட்களிலும் சீராகவேயிருந்தது.

கால நிலையும், பயிர் வளர்ச்சியும்—செங்கற்பட்டு மாவட்டத்தில் பெய்த மழை, நெல், உளுந்து, மற்றும் காயகறிகளுக்கும் உகந்ததாகயிருந்தது. வட ஆற்காடு மாவட்டத்தில பெரு மழையின் காரணததால் பல இடங்களில் கரும்புப்பயிர் தலை சாய்ந்தது ; ஆனல நெல், சோளம் முதலிய பயிர்களுக்கு மழை ஏற்றதாய் இருந்தது. தென் ஆற்காட்டில இடையருமல் பெயத மழையின காரணததால் நிலககடலையில் பூக்கும் காலம் தடைபட்டது. ஆமணககில சிறிதளவு கொககிப் புழு (Semilooper) காணப்பட்டது. நிலக்கடலை இலைப் புள்ளி நோயால் பாதிக்கப்பட்டது. தஞ்சை, திருச்சி மாவட்டங்களில் குறுவை நெல் அறுவடை சமயததில இடைவிடாது மழை பெய்தமையால் இதன மணிகள பெருமளவில வயலிலேயே முளைத்து விட்டன. மழையில் அறுவடை செய்யபபட்ட சிறிது நெல்லும் பயனற்றதாயிற்று. ஆனல் இம்மழை சம்பா பயிருக்கும் தாளடி நாற்றங்கால்களுக்கும உதவியது. மதுரை மாவட்டத்தில பெய்த மழையினல் ராகி விதைப்பும் சம்பாப் பயிர் நடவும் மேறகொள்ளப்பட்டன. ராமநாதபுரம் மாவடடததில் சோளம, ராகி, மற்ற சிறு தானியங்களுக்கு மழை உகநததாய் இருந்தது. திருநெலவேலி மாவட்டத்தில மழையினல கம்பு விதைப்பு தடைபட்டது. கன்னியாகுமரி மாவட்டததில் மழையால் தாக்கபபட்டு மாம் பிஞ்சுகள் பெருவாரியாக உதிர்ந்தன. கோவை மாவட்டததில் கோபிசசெட்டி பாளையததில் நெல் இரண்டாம் போகம் விதைப்புககு மழை பேருதவியாக இருந்தது, மேலும் இம்மாவட்டததில் ஆங்காங்கு சிவப்புக் கம்பளிப் புழு நிலக்கடலைப் பயிரையும் பருத்தியை அசுவும், கொக்கிப் புழுவும் தாக்கின. நீலகிரி மாவட்டத்தில் பெரும் மழையின காரணமாய் உருளைக கிழங்கில் கிழங்கு அழுகல் (Late Blight) நோய் பெருமளவில் உண்டாயிறறு. இதனல் இம்முறை உருளைக்கிழங்கு மகசூல் வெகுவாய் பாதிக்கப்பட்டது.

இம்மாதம் குறிப்பிடத்தக்க மழையளவுகளும், பிராந்திய மழையளவுகளும் பின் வருமாறு :—

குறிப்பிடத்தக்க மழையளவு (அங்குலத்தில்).

தேதி.	இடத்தின் பெயர்.	மழையளவு.
11—10—1962	தூத்துக்குடி	5·51
ஷை	கன்னியாகுமரி	4·55
17—10—1962	திண்டிவனம் •	5·10
23—10—1962	திரூர்க்குப்பம்	5·10
ஷை •	மீனம்பாக்கம்	5·51

பிராந்திய மழையளவு (அங்குலத்தில்).

பிராந்தியத்தின் பெயர்.	அக்டோபர் மாத மழையளவு.	சராசரியிலிருந்து மாறுபாடு.	குறிப்பு.
(1)	(2)	(3)	(4)
வட பிராந்தியம்	13·8	+5·2	அதிகம்.
கீழ்க்கரை பிராந்தியம்	14·5	+5·3	ஷை
மத்திய பிராந்தியம்	9·8	+3·4	ஷை
தென் பிராந்தியம்	13·4	+7·0	ஷை
மலைப் பிராந்தியம்	12·4	+2·3	ஷை

1962-ம் ஆண்டு அக்டோபர் மாதக் காலநிலை அறிக்கை

மழையளவு (அங்குலத்தில்).

இடத்தின் பெயர்	அக்டோபர் மாத மொத்த மழையளவு.	சராசரியிலிருந்து மாறுபாடு.	ஜனவரி 1-ம் தேதி முதல் மொத்த மழை அளவு.
வட பிராந்தியம்.			
சென்னை (மீனம்பாக்கம்)	18·2	+6·2	48.2
திரூர்குப்பம் *	15·6	+6·5	41.5
வேலூர்	10·4	+3·4	41·2
குடியாத்தம் *	10·9	+4·7	35·5
கீழ்க்கரைப் பிராந்தியம்.			
பாலூர் *	9·7	+0·4	24·4
திண்டிவனம் * ..	16·3	+7·8	42·5
கடலூர்	16·9	+5·4	38.2
நாகப்பட்டணம் ..	16·5	+5·9	36·4
ஆடுதுறை *	11·6	+4·3	34·2
பட்டுக்கோட்டை * ..	16·0	+7·9	33·9
மத்தியப் பிராந்தியம்.			
சேலம்	7·4	+1·0	39·9
கோயம்புத்தூர் * ..	10·5	—3·8	24·0
கோயம்புத்தூர் ..	11·2	—4·9	24·0
திருச்சிராப்பள்ளி ..	10·0	—3·7	28·9
தென் பிராந்தியம்.			
மதுரை	13·0	+5·6	27·6
பாம்பன்	18·2	+9·7	27·0
கோவில்பட்டி * ..	10·4	+3·6	20·9
பாளையங்கோட்டை ..	8·2	+1·1	22·6
அம்பாசமுத்திரம் * ..	10·8	+4·6	31·6
நாகர்கோவில் * ..	19·8	+14·4	51·1
கன்னியாகுமரி * ..	13·7	+9·8	33.3
மலைப் பிராந்தியம்.			
கொடைக்கானல் ..	12·5	+2·3	50·7
கூனூர் *	16·3	+4·2	49·3
உதகமண்டலம் * ..	11·2	—1·1	52·7
நஞ்சநாடு *	9·6	+3·6	63·1

குறிப்பு.—* சென்னை விவசாய இலாகாவின் ஆராய்ச்சிப் பண்ணைகள்.

ஆகாசவாணியின் திருச்சி வானொலி நிலையம்

கிராம நிகழ்ச்சிகள்—ஜனவரி 1963:

(செவ்வாய் 15—1—1963).

திரைப்பட இசை.

கிராம ரேடியோ மன்றம்.

1. கேள்வியும் பதிலும்.
2. தற்போதைய நிலைமை.

புதன் (16—1—1963)

விக்கல்—உரையாடல்

நமது பங்கு.
நாட்டுப் பாடல்கள்.
தேன்கூடு—இசைச் சித்திரம்
(எஸ். ராகவன் எழுதியது).

வியாழன் (17—1—1963).

நமது திட்டம்—துத்வா அணைத்திட்டம்—உரையாடல்.

நமது பங்கு.
மெல்லிசை
செய்தி விமர்சனம்

வெள்ளி (18—1—1963).

திரைப்பட இசை.

நமது பங்கு.
நம் மாதர் மன்றம்.

1. திட்டமிட்ட குடும்பம்.
நாட்டுப் பாடல் பயிற்சி.

சனிக்கிழமை (19—1—1963).

முதியோர் கல்விக்கூடம்—திருக்குறள் விளக்கம்.

நமது பங்கு.
கூடைமுடைபவருடன் பேட்டி.
திருப்புகழ்.

(ஞாயிறு 20—1—1963).

கிராமச் சிறுவர்கள்.
நமது பங்கு.
கிராமச் சாவடி—பேபர்பிட் பெரியசாமி வழக்கு.
(தனஞ்சயன் எழுதியது).

திங்கள் (21—1—1963).

ஆகாசவாணியின் ஒலிப்பதிவு பாடல்கள்.

நமது பங்கு.
விலைவாசிகளின் வாராந்திர விமர்சனம்.
வெற்றிச் சங்கு—தொடர் சித்திரம்.
(கோ. செல்வம எழுதியது).

செவ்வாய் (22—1—1963).

திரைப்பட இசை.

கிராம ரேடியோ மன்றம்.

1. கேள்வியும் பதிலும்.
2. கலப்பு இன ராகியும், சோளமும்.

புதன் (23—1—1963).

புகையிலைக்கு உரம்—உரையாடல்.

நமது பங்கு.
நாடடுப் பாடல்கள்.
நெஞ்சுக்கு நீதி—நாடகம்.
(அப்துல் காதர் எழுதியது).

வியாழன் (24—1—1963).

நமது திட்டம்—கிராமங்களின் தொழில் வளம்.
(உரையாடல்).

நமது பங்கு.
மெல்லிசை.
செய்தி விமர்சனம்.

வெள்ளி (25—1—1963).

திரைப்பட இசை.

நமது பங்கு.
நம் மாதர் மன்றம்.
கருப்பாயியின் உண்மை—சிறு கதை.
நாட்டுப் பாடல் பயிற்சி.

சனிக்கிழமை (26—1—1963).

முதியோர் கல்விக் கூடம்.

நமது பங்கு.
சர்க்கார் இலாகா பேச்சு.
சித்தர் பாடல்கள்.

ஞாயிறு (27—1—1963).

கிராமச் சிறுவர்கள்.

நமது பங்கு.
கண்டு முதல் நாடகம்.

திங்கள் (28—1—1963).

ஆகாசவாணியின் ஒலிப்பதிவுப் பாடல்கள்.

நமது பங்கு.
விலைவாசிகளின் வாராந்திர விமர்சனம்.

செவ்வாய் (29—1—1963).

திரைப்பட இசை.

கிராம ரேடியோ மன்றம்.

1. கேள்வியும் பதிலும்.
2. கால்நடைகளின் சரும பாதுகாப்பு.

புதன் (30—1—1963).

கோழிகளைத் தாக்கும் உண்ணி நோய்—
உரையாடல்.

நமது பங்கு.
நாட்டுப் பாடல்கள்.
நிகழ்ச்சி நிரல்.

வியாழன் (31—1—1963).

நமது திட்டம்—கிராம மின் அபிவிருத்தி—
உரையாடல்.

நமது பங்கு.
மெல்லிசை.
செய்தி விமர்சனம்.

ஜப்பானிய விவசாயிகள் கையாண்ட ஒற்றைமாடு பூட்டிய ஜப்பானியக் கலப்பை—இரண்டுமாடுகள் பூட்டிய கலப்பை செய்யும் அளவுக்கு வேலை செய்த இக் கருவி அருகிலுள்ள நம நாட்டு விவசாயிகளைப் பெரிதும் கவர்ந்தது.

gistered No. M-4646

©
தமிழ்நாடு அரசாங்கம்
1963

உத்தரப்பிரதேசத்தில் ஜப்பானிய முறை சாகுபடி

ஜப்பான் விவசாயிகள் ஜப்பானிய ஊடுழவுக் கருவியோட்டிக் களையெடுக்கின்றனர்.
இயந்திர சாதனங்களைக் கொண்டே சாகுபடி வேலைகளை விரைவாகவும், தவக்கம் ஏற்படாமலும் செய்தல் ஜப்பானிய முறையின் ஒரு முக்கிய அம்சமாகும்.

69969

ஜப்பானிய விவசாயிகள் உத்திரப்பிரதேசத்தில் ஜப்பானிய சாகுபடி முறையைக் கையாண்டு ஏக்கருக்கு 7½ மூட்டை நெல் விளையும் நிலத்திலிருந்து 26 மூட்டைகளை விளைவித்துக் காண்பித்தனர்.

தமிழ்நாடு அரசாங்க அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டு, விவசாய இலாகா தலைவரால் வெளியிடப்பட்டது.